அறிவின் அற்புதம்

பயமறியா பண்பாளர்

ஜல்பிகார்

என்றொரு நவீன இலக்கியம்

உயர்ந்த மனிதர்

முதலுதவி பெட்டகம்

உத்தம நண்பன்

உன்னத ஆத்மா

சிறந்த வள்ளல்

சுயத்தின் சாட்சி

தன் தனித்துவ பண்புகளினால்
வாழ்வில் ஏற்றம் கண்ட
உன்னத மனிதரின், உத்தமரின்

வாழ்க்கை பக்கத்திலிருந்து
மனதைத் தொட்ட நினைவுகளின்
சங்கமம் இப்புத்தகம்!

ஜல்பிகார்

என்றொரு

நவீன இலக்கியம்

தன் தனித்துவ பண்புகளினால்
வாழ்வில் ஏற்றம் கண்ட
உன்னத மனிதரின், உத்தமரின்
வாழ்க்கை பக்கத்திலிருந்து
மனதைத் தொட்ட நினைவுகளின்
சங்கமம் இப்புத்தகம்!

ஜுல்பிகார்

– ‘ஒரு உன்னத மனிதம்’

இந்தப் புத்தகம்
ஜுல்பிகாரின் அன்பு குடும்பத்தினருக்கும்,
நீணிலம் பேணும் இராணுவ வீரர்களுக்கும்,
உன்னத ஆசிரியப் பெருந்தகைகளுக்கும்,
சிறந்த மாணவச் செல்வங்களுக்கும்
சமர்ப்பணம்!

தொகுப்பு : நண்பர்கள்

இப்புத்தகத்தின் உரிமை ஜுல்பிகாரின் குடும்பத்தினர் மற்றும்
இந்நூலின் ஆசிரியருக்கே...

இப்புத்தகம் விற்பனைக்கல்ல.

அச்சிடப்பட்ட ஆண்டு: அக்டோபர் 2021

நன்றி!

ஜூல்பிகாரின் வாழ்வில் பங்கு கொண்ட அனைத்து நல்ல உள்ளங்களையும், நினைவில் நிறுத்தும் நேரமிது...

❁ **'பெற்றோரே! பேறு பெற்றோரே!'**

'ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே' (புறநானூறு: 312)

என்று சிறந்த பெற்றோரின் வளர்ப்பைப் பற்றிக் கூறுவது போல்... ஒரு தலைசிறந்த மகனைப் பெற்றதோடு, அவரை நற்குணங்கள் மிக்கவராகவும், அனைத்து நல்லொழுக்கங்களையும் ஒருங்கே பெற்ற ஒரு முழு மனிதராக, இந்த உலகத்திற்குக் கொடுத்த ஜூல்பிகார் அவர்களின் பெற்றோரைப் போற்றுகிறோம்.

'ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்' (குறள்: 69)

என்பதற்கு முழு உதாரணமாக ஜூல்பிகாரின் பெற்றோர் திகழ்ந்தார்கள். பல்வேறு தருணங்களில் இக்குறளை உணர்ந்தும் இருக்கிறார்கள்.

❁ **'உடன் நின்ற உன்னதம்'**

திருமணத்திற்குப் பின் ஜூல்பிகார் பெற்ற அனைத்து வெற்றிகளுக்கும் துணை நின்று, இன்ப துன்பங்களில் பங்கு கொண்ட, வாழ்வில் ஒன்றரக் கலந்த அவரின் துணைவியாருக்கு நன்றி!

❁ **'தம்பி எனும் தோழன்'**

சகோதரராக மட்டுமல்லாமல், ஒரு தோழனுக்கும் மேலாக, ஜூல்பிகாரின் நல்ல எண்ணங்களுக்கு உயிர் கொடுத்து உரமூட்டி, உறுதுணையாக நின்ற அவரின் இளைய சகோதரருக்கு நன்றி!

❁ **'சொந்தங்களே வெற்றியின் ஆணிவேர்'**

அவரின் உற்றார் உறவினர்களுக்கு நன்றி!

❁ **'நல்வினை நல்கிய நண்பர்களே'**

இங்கிலாந்தில் அவருக்கும், அவரின் குடும்பத்திற்கும் உறுதுணையாக இருந்த நண்பர்களுக்கும், வாழ்வின் பல நேரங்களில் துணை நின்ற அனைத்து நண்பர்களுக்கும் நன்றி!

❁ **பென்ஷனர் தெரு / ஜெனரல் பஜார் தெரு (தென்னூர், திருச்சி) மக்களுக்கு நன்றி!**

ஜூல்பிகாரின் திறமான, திடமான கல்வியும், தரமான நற்பண்புகளும், அவரை மற்றவர்களிடமிருந்து முதன்மைப்படுத்தி அடையாளம் காண்பித்தது. அவரின் அறிவையும், பண்புகளையும் செம்மைப்படுத்திய ஆசிரியர்கள், கல்விக்கூடங்கள் புனிதத்தின் அடையாளங்கள்.

❁ **'வாழ்வின் முதற்படி'**

சி.எஸ்.ஐ. ஆல்செயின்ட்ஸ் நடுநிலைப்பள்ளி, தென்னூர், திருச்சி.

❁ **'பதின்மவயத்தைப் பட்டைத் தீட்டும் பருவம்'**

புனித வளனார் கல்லூரி மேல்நிலைப்பள்ளி, திருச்சி.

❁ **'வளர்ச்சியை நோக்கிய அடுத்த படி'**

ஜமால் முஹம்மது கல்லூரி, திருச்சி.

வாழ்வை செதுக்கிய ஆசிரிய மற்றும் பேராசிரியப் பெருமக்களுக்கு நன்றி!

ஜூல்பிகாரின் வாழ்வில் அடுத்த நிலை முன்னேற்றத்திற்குப் படிக்கட்டு களாக இருந்த பணி நிறுவனங்கள்...

'பாதைகள் வகுத்த பணிகள்'

- ❁ 'பார்க் டெக் (Park Tech)' கணினி மையம், தில்லைநகர், திருச்சி
- ❁ TCS (Tata Consultancy Services) Chennai மற்றும் TCS Mumbai
- ❁ இங்கிலாந்தில் பணிபுரிந்த நிறுவனங்கள்

'நிழற்படங்கள் பற்றிய குறிப்பு'

- ❁ இப்புத்தகத்தில் வைக்கப்பட்டுள்ள நிழற்படங்கள், நண்பர்கள் மற்றும் இணையதளத்தின் மூலம் சேகரிக்கப்பட்டவைகள். புத்தகத்தின் தன்மைக்காக சில நிழற்படங்கள் சற்றே மாற்றப்பட்டுள்ளது. இவற்றை சேகரிக்க உதவிய நண்பர்களுக்கு நன்றி!

அவரின் நலன் விரும்பிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும்,
நான்கறை இதயத்தின் ஆழத்திலிருந்து
நன்றியை உரித்தாக்குகிறோம்!

யார் இந்த ஜூல்பிகார்...?

தமிழின் முதல் இலக்கியமான தொல்காப்பியம்,

'வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட்டு ஆக லான' (தொல்–பொருள்: 638)

உலகம் இயங்குவதே உயர்வான குணம் கொண்ட பண்புடையவர்களின் நற்செயல்களால் தான் என்கிறது. அந்த வகையில், வாழும் காலத்தில் நாங்கள் நட்பு பாராட்டிய, மிக உயர்ந்த உன்னத மனிதர் ஜூல்பிகார் அவர்கள். ஒரு தனிமனிதரிடம் 'இத்தனை சிறப்பம்சங்களா?' என, அனைவரும் வியக்கும் வண்ணம் வாழ்ந்தவர், அனைவருக்கும் பல வகைகளில் கைமாறு கருதாமல் உதவியவர்.

'அஞ்சாமை ஈகை அறிவுக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு' (குறள்: 382)

'தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனான் பவர்க்கு' (குறள்: 383)

துணிவு, வேண்டுவோருக்கு வேண்டிய கொடுப்பது, வரும்முன் காக்கும் அறிவு, ஆபத்து வந்தபின் தளராத ஊக்கம் இந்நான்கிலும் குறையாமல் இருப்பது ஆளுவோரின் இயல்பாக இருக்க வேண்டும். செயல் ஆற்றுவதில் சோர்வு இல்லாமை, அனைத்தையும் அறியும் கல்வி, தீயவை எதிர்த்தாலும் நல்லன செய்வதற்கு ஏற்ற துணிவு இம்மூன்றும் நாட்டை ஆளுவோரை விட்டு விலகக் கூடாது. இவ்வாறு, அரசர்களுக்கும், வேந்தர்களுக்கும் திருவள்ளுவம் கூறியவைகள் ஜூல்பிகாருக்கு 100% பொருந்திப் போகிறது.

'அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு' (குறள்: 992)

அன்புடையவராக இருப்பதும், உயர்ந்த குடியில் பிறந்த இலக்கணத்துக்கு உரியவராக இருப்பதும்தான் பண்புடைமையெனக் கூறப்படுகிற சிறந்த நெறியாகும். இக்குறளுக்கு சொந்தக்காரராகிறார் ஜூல்பிகார் அவர்கள்.

இவரைப் பற்றி ஒரு முத்தாகச் சொல்லுவதென்றால், ஆத்திசூடியின் முதன்மையான '**அறம் செய விரும்பு**' மட்டுமல்லாமல், பல கடல்கள் கடந்து பல்வேறு நாடுகளுக்கு சென்றாலும் அவர் '**தனி மனித ஒழுக்கம்**' என்னும் அறத்தையும் விரும்பினார் மற்றும் அதை அனைத்து நிலைகளிலும் கடை பிடித்தார்.

‘ஞிமிரென இன்புறு’ (புதிய ஆத்திசூடி: 39)

பாரதியார் எடுத்துக்காட்டிய நல்ல கொள்கைகளுடன் நிமிர்ந்து வாழ்ந்தவர்.

எளியோனாகப் பிறந்து
தன் கூரிய அறிவுத் திறமையினாலும்
சீரிய உயர் பண்புகளினாலும்
வாழ்வில் ஏற்றம் கண்டது மட்டுமல்லாமல்
எங்கள் அனைவரின் உள்ளங்களிலும்
நீங்கா இடம் பிடித்தவர்!

உயர்ந்த மனிதத்தின் அடையாளம்

ஜுல்பிகாரைப் பற்றி, 'ஒரு புத்தகம் எழுத வேண்டும்' என அவர் சகோதரர் கூறியபோது, நண்பர்களாகிய எங்களுக்கு புத்தகத்தின் தலைப்பு என்ன வைக்கலாம் என, ஒரு சிறு குழப்பம் ஏற்பட்டது.

'அன்பின் வழியது உயிர்நிலை ஆதலால்', ஜுல்பிகார் என்ற பதம், எங்களில் பல்வேறு பரிணாமம் கொண்டவைகளாக இருந்தன.

- இராணுவ வீரரின் தவப்புதல்வன்
- உத்தம நண்பன்
- சிறந்த மனிதர்
- அறிவின் அற்புதம்
- உன்னத ஆத்மா
- முதலுதவிப் பெட்டகம்
- பயமறியா பண்பாளர்
- வாழும் காலத்தில் நாங்கள் பார்த்த வள்ளல்
- பெற்றோரைப் பெருமைபடுத்திய உயர் மகன்
- சொந்த முயற்சிகளால் உச்சம் தொட்டவர்
- சிறுமையில் வீழாத பெருமகன்
- சுயத்தின் சாட்சி
- தலைக்கனம் இல்லா தலைமகன்
- கர்மயோகி – தன் கடமைகளை விரைவாகவும், தனக்கு நிறைவாகவும், பிறருக்கு அதிகமாகவும் உதவிகள் செய்தவர்

இந்த முகப்பினைப் படித்தவுடனே, நீங்கள் இந்த முழு புத்தகத்தின் கருத்தைப் பற்றிய மேலோட்டமான முடிவைப் பெறுவீர்கள்!

இந்த மனிதரின் சிறப்பு பற்றி எளிதில் நீங்கள் புரிந்து கொள்ளவும், 'நீங்கள் எதற்காக இந்தப் புத்தகத்தைப் படிக்க வேண்டும்?', 'ஏன், நண்பர்களாகிய நாங்கள் சக நண்பராகிய ஜுல்பிகார் பற்றி எழுதுகிறோம்?' என்பதற்கும் இதுவே காரணங்கள்.

ESTD:1951
ஜமால் முஹம்மது
JAMAL MOHAMED
ACCREDITED BY NAAC
TIRUCHIRAPPALL
GOLDEN JUBILE
St. Joseph's
her Secondary School

ஜூல்பிகார்

இந்தப் புத்தகத்தின் நோக்கம், நீங்கள் ஜூல்பிகாரைப் பின்பற்ற வேண்டும் என்று சொல்வதல்ல; மாறாக ஜூல்பிகார் என்ற தனி மனிதர் தன் சொந்த முயற்சிகளாலும், மிகவும் எளிமையான ஆனால் நிஜ வாழ்க்கையில் பலர் பின்பற்ற முடியாத பல அரிய, கடின நற்குணங்களை மிக இயல்பாக வெளிப்படுத்தி, மிகக் குறுகிய காலத்தில் உயர்வையும், அனைவரின் மனதில் நன்மதிப்பையும் பெற்றவர். இப்பெருமைகளையெல்லாம் இவர் எவ்வாறு பெற்றார் என்பதைப் பற்றிய எங்களின் நினைவலைகளே இந்தப் புத்தகம்.

நாங்கள் வாழும் காலத்தில் சக நண்பர்களாகிய நாங்களே அவரை ஒரு முன்மாதிரியாக எடுத்துக் கொண்டு, அவரின் நற்குணங்களை பின்பற்றி, அவைகளைப் பழக முயற்சித்தோம்.

எங்களின் அடுத்த தலைமுறை உறவினர்கள் (சகோதர/சகோதரிகளின் குழந்தைகள்) மற்றும் எங்களின் குழந்தைகள் எனப் பலரிடமும், ஜூல்பிகாரின் வெற்றிப் பாதைகளைப் பற்றிக் கூறி... அவர்களும் ஜூல்பிகார் வாழும் காலத்திலேயே, ஒரு சிறந்த முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு அவரைப் போல ஆக வேண்டும் என பல நண்பர்களின் குடும்பத்தினர்கள் பல்வேறு தருணங்களில் அறிவுறுத்தியுள்ளார்கள்.

‘ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு’ (குறள்: 21)

‘இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்தில் வுலகு’ (குறள்: 387)

வாக்கில் இனிமையும், பிறர்க்கு வழங்கிக் காத்திடும் தன்மையும் கொண்டவர்க்கு இவ்வையகமே வசப்படும்.

‘ஜூல்பிகார் – ஓர் உயர்ந்த மனிதத்தின் அடையாளம்’

❖ ❖ ❖

ஜூல்பிகார் பிறந்த குழந்தை இயேசு மருத்துவமனை (Child Jesus Hospital), திருச்சி.

சர்வகலாசாலை

மகாகவி பாரதியார் சொன்ன **'தகுந்த குடும்பம் – சர்வகலாசாலை'** எனும் கூற்றுப்படி, சையத் ஜுல்பிகாரின் குடும்பம் ஒரு பல்கலைக்கழகமாகவே இருந்தது.

திருச்சி குழந்தை இயேசு மருத்துவமனையில் (Child Jesus Hospital), 18 ஆம் தேதி அக்டோபர் மாதம் 1975ஆம் ஆண்டு, உயர்திரு. சையத் அப்துல் சலாம் (அமரர்) மற்றும் உயர்திருமதி. பரிதா பேகம் தம்பதியருக்கு, மூத்த மகனாக உயர்திரு. சையத் ஜுல்பிகார் அவர்கள் பிறந்தார். 19, பென்ஷனர் தெரு (தென்னூர், திருச்சி) தான் இவர் வளர்ந்த வீடு.

அவர் தந்தை, 'இந்திய இராணுவ கார்ப்ஸ் ஆஃப் சிக்னல்ஸ்' இல் (Indian Army Corps of Signals) பணி புரிந்தவர். அவர் தாயார், அக்கால பி.யூ.சி படிப்பில் மிகச் சிறந்த மதிப்பெண் பெற்று மாநில அளவில் தரவரிசை பெற்றவர். கணிதத்தில் முதல் மதிப்பெண் பெற்றவர்களில் ஒருவர். இளைய சகோதரர் திரு. சையத் நாஜிமுத்தீன் அவர்கள், முனைவர் பட்டம் பெற்றவர். உதவி பேராசிரியராக திருச்சியில் பணியாற்றுகிறார்.

சையத் ஜுல்பிகாரின் வாழ்க்கைத் துணைவி, திருமதி. சை.பாத்திமா சுல்தானா அவர்கள் நன்கு படித்தவர். அவர் கணினி அறிவியலில் முதுகலைப் பட்டம் பெற்றவர். ஜுல்பிகாருக்கு சை.ஜாரா மற்றும் சை.ஜியானா எனும் இரு குழந்தைகள் உள்ளனர்.

சையத் ஜுல்பிகாரை பள்ளியிலும், கல்லூரியிலும், பணி செய்யும் இடத்திலும், மற்றவர்களும் 'ஸுல்பி' என்றும் சிலர் 'ஜுல்பிகார்' என்றும் அழைப்பார்கள். குடும்பத்தினரும், உற்றார், உறவினர்களும், நெருங்கிய நண்பர்களும் 'பப்பு' என்றழைப்பார்கள்.

'இயல்வது கரவேல்' (ஆத்திசூடி: 3) என்பதை இவர் குடும்பத்தினர் பின்பற்றினார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று.

சிறந்த குடும்பத்திற்கு தமிழ் இலக்கியம் கூறும் வரையறைக்கு ஒப்ப இவர் குடும்பம் வாழ்கிறது.

ஜூல்பிகார் வளர்ந்த வீடு – 19, பென்ஷனர் தெரு (தென்னூர், திருச்சி).

‘ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;
பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்;
அன்பெனப்படுவது தன்கிளை செறாஅமை;
அறிவெனப்படுவது பேதையார் சொல் நோன்றல்;
செறிவெனப்படுவது கூறியது மறாஅமை;
நிறையெனப்படுவது மறைபிறர் அறியாமை;
முறையெனப்படுவது கண்ணோடாது உயிர்வெளவல்;
பொறையெனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்’

(கலித்தொகை–நெய்தற்கலி: 133)

வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய, சங்க காலத் தமிழ் இலக்கியங்கள் அறிவுறுத்திய, இந்த ஒன்பது அறிவுரைகளை, பண்பறத்தை தன் வாழ்வில் எளிதாகவும், இயல்பாகவும், எஞ்ஞான்றும் பின்பற்ற முழு உறுதுணையாக ஜூல்பிகாரின் குடும்பத்தினர் இருந்தார்கள்.

‘செயற்கரிய செய்வார் பெரியர்...’ (குறள்: 26)

ஜூல்பிகார், 1 ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்பு வரை படித்த, திருச்சி, தென்னூர், சி.எஸ்.ஐ. ஆல்செயின்ட்ஸ் நடுநிலைப்பள்ளி.

கற்றலும், அதன்படி நிற்றலும்

ஜுல்பிகார் அவர்கள்,

- 1 ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்பு வரை (1980 – 1985): **சி.எஸ்.ஐ. ஆல்செயின்ட்ஸ் நடுநிலைப்பள்ளி**, தென்னூர், திருச்சியிலும்;
- 6 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை (1985 – 1992): **தூய வளனார் கல்லூரி மேல்நிலைப்பள்ளி**, திருச்சியிலும் பயின்றார்.

அப்பொழுது, அவர் தந்தை இராணுவத்தில் பணி புரிந்து கொண்டிருந்தார். இராணுவத்தில் இருக்கும் ஒழுக்கம், கட்டுப்பாடு, நேரம் தவறாமை, தூய்மை, நேர்மை, மன தைரியம், கண்ணியம், பொறுப்புணர்வு, தியாகம், அதீத கவனம் என அனைத்தையும் ஜுல்பிகாரிடம் சிறு வயது முதலே கண்டதாக, அவருடன் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்த அவரின் நண்பர்கள் கூறினார்கள்.

ஒருநாள், பள்ளியின் (சி.எஸ்.ஐ. ஆல்செயின்ட்ஸ் நடுநிலைப்பள்ளி) காலைப் பேரவை கூட்டத்தில் ஜுல்பிகாரின் தாயார் '**தேசப்பற்று**' என்ற தலைப்பில் பேசியுள்ளார். அப்பொழுதுதான் அவரின் பள்ளி நண்பர்களுக்கு; 'ஏன்?, ஜுல்பிகாரின் பண்புகள் அனைத்தும் ஒரு இராணுவ குணங்கள் கொண்டதாக மட்டுமல்லாமல், அப்பண்புகளை இயல்பாகவும் எளிதாகவும் தொடர்ந்து பின்பற்றுகிறார்' என்று புலப்பட்டது.

'தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்' (குறள்: 114)

ஒரு கட்டுப்பாட்டுடன் கொண்ட, நல்ல பழக்க வழக்கங்களை மொத்த குடும்பமுமே பின்பற்றியதால், ஜுல்பிகாருக்கு இயற்கையிலேயே ஒரு நல்ல குடும்ப சூழல் அமைந்திருந்தது.

பள்ளி நண்பர்கள் பேசும்போது, ''ஜுல்பிகாரின் உடை அவரின் குணத்தைப் போலவே எப்பொழுதும் தூய்மையாக இருந்தது. நடை மற்றும் பாவனைகள் ஒழுக்கமான முறையில் இருந்ததற்கு அவரின் தாயின் வழிகாட்டல் மிக முக்கியக் காரணமாக அமைந்தது'' என மேற்கோள் இட்டனர்.

'தாயைப் போல பிள்ளை, நூலை போல சேலை' என்ற பழமொழிக்கேற்ப ஜுல்பிகாரின் பழக்க வழக்கங்கள், மிக உயர்ந்ததாக அனைவரும் பாராட்டும் வகையிலிருந்தன.

''ஜுல்பிகார் பள்ளிக்கு எடுத்து வரும் மதிய உணவானது ஊட்டச்சத்து நிறைந்ததாகவும், உணவுக் கட்டுப்பாடு மற்றும் உணவு பற்றிய விழிப்புணர்வு

ஜூல்பிகார், 6 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை படித்த திருச்சி, தூய வளனார் கல்லூரி மேல்நிலைப்பள்ளி.

அவருக்கு சிறு வயது முதலே இருந்ததாக" பள்ளி நண்பர்கள் நினைவு கூர்ந்தார்கள். இந்த உணவுக் கட்டுப்பாடு மற்றும் விழிப்புணர்வு ஜூல்பிகாருக்கு இங்கிலாந்தில் குடியேறிய போதும் மற்றும் பல்வேறு மேலை நாடுகளுக்குச் சென்ற போதும் பயனளித்தன.

ஜூல்பிகாரின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் நன்கு படித்திருந்ததால், அவரின் முழுக் கவனமும் படிப்பில் இருந்தது.

எந்த ஒரு விஷயத்திலும் புதுமையைப் பின்பற்றுபவராகவும், மாற்று சிந்தனைகள் கொண்டவராகவும் பள்ளியிலிருந்தே இருந்திருக்கிறார். உதாரணத்திற்கு, "அவர் பயன்படுத்திய சாதனங்கள், எழுது பொருட்கள், மற்றும் அனைத்தும் புதுமையாகவும், நேர்த்தியாகவும் இருந்ததாக" நண்பர்கள் நெகிழ்ந்தார்கள்.

ஜூல்பிகாரின் தாயார் 'பெற்றோர் ஆசிரியர்' குழுவில் மிக ஈடுபாடுடன் இருந்ததோடு, மற்ற மாணவர்களின் தாயார்களுடன் நட்புடன் பயனுள்ள விவரங்களை பகிர்ந்து கொள்வார் என்றார்கள்...

இப்பண்பே ஜூல்பிகார் நட்பை உயர்வாக மதித்ததற்கும், பேணிக் காத்ததற்கும் அடித்தளமாக அமைந்தது. நல்ல நட்பு வளர்வதற்கும், மேம்படுவதற்கும், சிறப்படைவதற்கும், குடும்பங்களுக்கிடையே நட்பு இருப்பது உறுதுணையாக நிச்சயம் இருக்கும். இதற்கு இவரின் தாயார், ஒரு சிறந்த உதாரணம். ஜூல்பிகாரின் வெற்றிகளுக்கு அவரது தாயாரின் பங்களிப்பு மிக முக்கியமானதாக அமைந்தது.

ஜூல்பிகாரின் கால நிர்வாகம் / நேரந்தவறாமை பண்பு மிகச் சிறப்பானவை களாக அவரது பள்ளி நண்பர்களால் பாராட்டப்படுகின்றன. "ஒருமுறையும் அவர் நேரம் தவறியதில்லை என்றும், எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் அவர் முன்னதாகவே வந்து விடுவார்" என்றும் பாராட்டினார்கள்.

பள்ளியில் படிக்கும் போது, அன்றைய தினத்தின் பாடங்களை அன்றே படித்து முடித்து விடும் பழக்கம் கொண்டவராக இருந்தார். இதேயே பின்பு கல்லூரியிலும் தொடர்ந்தார். அன்றைய வேலையை அன்றே முடிக்கும் பழக்கம் கொண்டிருந்ததால்... அவருடைய பணியில் தொடர்ந்து வெற்றி பெற்றார்.

'தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை' (குறள்: 672)

என்ற வள்ளுவர் குறள் நெறி வழுவாமல் வாழ்ந்தார்.

❖ ❖ ❖

ஜூல்பிகார், 6 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை படித்த திருச்சி, தூய வளனார் கல்லூரி மேல்நிலைப்பள்ளி.

வெற்றிக்கு அழகு ஜூல்பிகார்

'ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு' (கொன்றை வேந்தன்: 86)

உற்சாகமான முயற்சியோடு இருப்பதே முன்னேற்றத்திற்கு அழகு என்பதை வாழ்க்கையின் அனைத்து நிலையிலும் கடைபிடித்தார் ஜூல்பிகார்.

உண்மையான விளையாட்டு வீரருக்கான பண்புகள் அனைத்தும் இவரிடம் வெளிப்பட்டது. அது சைக்கிளில் பல நண்பர்களை வீட்டிலிருந்து மைதானத்திற்கு அழைத்துச் செல்வதாகட்டும், அணியில் நண்பர்கள் மட்டுமல்லாமல் சிறுவர்கள் (ஜூனியர்ஸ்) நன்றாக விளையாடும் போது அவர்களைப் பாராட்டிய விதமாகட்டும், எதிரணி வீரர்கள் நன்றாக விளையாடும் போது அவர்களின் தோளைத் தட்டி பாராட்டிய மனமாகட்டும், ஒரு தலை சிறந்த விளையாட்டு வீரருக்கான சிறந்த குணங்கள் அனைத்தும் ஜூல்பிகாரிடம் வெளிப்பட்டது.

பள்ளியில் படிக்கும் காலங்களில் ஜூல்பிகாருக்கு அனைத்து விளையாட்டிலும் ஆர்வம் இருந்தது. அவர் தன் நண்பர் வீட்டிற்கு சதுரங்கம் மற்றும் சதுப்பலகை (கேரம் போர்டு), விளையாடச் செல்வார். அதன் மூலம்தான் அந்தப்பகுதி கிரிக்கெட் அணி நண்பர்களுடன் பழக்கமானார். அந்தக் காலத்தில், சீனியர்ஸ் கிரிக்கெட் அணியில் இடம் பெற இயலாத ஜூனியர்ஸ் அவர்களுக்குள் ஒரு அணியை உருவாக்கினார்கள். அந்த அணியில் துவக்க ஆட்டக்காரருக்கான தேவை இருந்தது.

ஆரம்ப காலங்களில் 'கார்க் பால்' கொண்டு ஆடும் கிரிக்கெட் போட்டிகளில், எங்களிடம் எந்தவித தடுப்பு உபகரணங்களும் கிடையாது. விக்கெட் கீப்பரும் வெறும் கையால் தான் பந்தைப் பிடிப்பார். அப்பொழுது நாங்கள் இருந்த சூழலில், அவற்றை வாங்கும் வசதி வாய்ப்புகள் அணியில் யாரிடமும் இல்லை.

சில நேரங்களில் 'கார்க் பால்' மட்டையில் படாமல் காலிலும், உடம்பிலும் கூடப்படும். ஆகையால், துவக்க ஆட்டக்காரராக களமிறங்க பலருக்கும் பயம் இருந்தது. ஆனால், ஜூல்பிகார் மிகத் துணிச்சலாக துவக்க ஆட்டக்காரர் நிலையை ஏற்றுக் கொண்டார். பிற்காலங்களில், நாங்கள் விளையாடிய 'டென்னிஸ் பால் கிரிக்கெட் போட்டிகளிலும்' அதிக முறை துவக்க ஆட்டக் காரராகவே நீடித்தார்.

ஜூல்பிகார்

பேட்டிங் (Batting) மற்றும் பந்து வீசுவதை (Bowling) விட, சிறப்பான பீல்டிங் செய்வதில் ஆர்வம் காட்டினார். அணியின் மிகச் சிறந்த பீல்டர் (Fielder) அவர். எந்தக் கேட்ச்சையும், தவற விட்டதே இல்லை. அணியின் கேப்டன், அவரை மிகக் கடினமான இடங்களில் தான் எப்பொழுதும் பீல்டிங் செய்ய நிறுத்துவார். ஜூல்பிகாரின் பேட்டிங் ஸ்டைல் மிக வித்தியாசமாக இருக்கும். "இவர், ஏன் இவ்வாறு நிற்கிறார்?, பந்தை வித்தியாசமாக எதிர் கொள்கிறார்!" என்று சில நேரங்களில் எதிரணி பவுலர்கள் திகைப்பதுண்டு.

அனைத்து போட்டிகளிலும், இவரின் பங்களிப்பு முழுமையானதாக இருக்கும். ஜூல்பிகார் விரைவாக ஓடும் திறமை கொண்டவர். எனவே, அணி பேட்டிங் செய்யும்போது துவக்க ஆட்டக்காரராகக் களமிறங்கி, அவர் அவுட் ஆனதற்குப் பிறகு, மற்ற மெதுவாக ஓடும் திறன் கொண்ட அணி வீரர்களுக்கு 'பை–ரன்னராக' ஓடுவார். இந்த பங்களிப்பே, பல போட்டிகளில் அணி வெற்றி பெற உதவியது.

விளையாட்டில் மற்றவர்களுக்காக பை–ரன்னராக ஓடும் பண்பு, அவர் வாழ்க்கையிலும் தொடர்ந்து. பிற்காலத்தில் அவர் வேலைக்குச் சென்று பொருளீட்டும் போது, அவர் அனைவரது வாழ்க்கையையும் தொடர உதவினார். பொருளுதவி, அறிவு பகிர்தல், நண்பர்களுக்கு வேலை வாங்கித் தருவதில் உதவியென பலருக்கு வாழ்வில் தடங்கல் ஏற்பட்ட போது, அவற்றை தகர்த்து எறியும் ஊன்றுகோலாக நண்பர்களுக்குக் கைக்கொடுத்தார்.

தனது கிரிக்கெட் அணியின் சிறந்த ஒருங்கிணைப்பாளராக ஜூல்பிகார் இருந்தார். இப்பொறுப்பை யாரும் வழங்கவில்லை. யாரும் அவரை கிரிக்கெட் அணியை ஒருங்கிணைக்கவும் சொல்லவில்லை. ஆனாலும் அணியின் குறைபாடு இதுதான், இதனால்தான் அணி தோற்கிறது என்று அவர் பகுப்பாய்வு செய்து அதனை நிவர்த்தி செய்யும் முனைப்போடு, தானே அந்த ஒருங்கிணைக்கும் பொறுப்பை எடுத்துக் கொண்டார். தொடக்கத்தில் நண்பர்களுக்கிடையே ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்பதால், அவரின் ஒருங்கிணைக்கும் முயற்சி தோல்வியே அடைந்தது. ஆனாலும் இவரின் விடாமுயற்சியால் போகப்போக கிரிக்கெட் அணி நன்கு ஒருங்கிணைக்கப் பட்டது. பல வெற்றிகளை அவருடைய அணி பெற்ற பின்தான், நண்பர்களுக்கு ஜூல்பிகாரின் அர்ப்பணிப்பு பற்றி புரிந்தது.

‘தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்’ (குறள்: 619)

என்ற நெறிக்கேற்ப தன் விடா முயற்சியால், சிறந்த ஒருங்கிணைப்புப் பணியை தன் வயப்படுத்திக் கொண்டார். எந்த ஒரு நிலையிலும், தன் முயற்சியை அவர் கைவிடவும் இல்லை; பின்பு வெற்றிகள் பெற்றபின் அதற்குக் காரணம் நான் தான் என்று இறுமாப்பும் கொள்ளவில்லை. அவர் தன் பணியை வழக்கம் போல் தொடர்ந்தார்.

பெற்ற வெற்றிகளை எப்படி தொடர்வது, அணி இன்னும் எவ்வகையில் மேம்பட வேண்டும் எனச் சிந்தித்தபடி அடுத்த கட்டத்திற்கு நகர்ந்துவிட்டார்.

இப்பண்புகளும், அனுபவங்களும் அவருக்கு கல்வியிலும், பிற்காலத்தில் வேலை செய்யும் நிறுவனத்தில் தனது திட்டக் குழு உறுப்பினர்களையும், சக ஊழியர்களையும், ஒருங்கிணைக்கவும், பணியில் மாபெரும் வெற்றி கொள்ளவும் உதவியது.

❖ ❖ ❖

புதியன விரும்பு

'நுட்பம் தெரிந்தால் நூலையும் கோலாக்கலாம்' என்ற பொன்மொழிக் கேற்ப, ஜுல்பிகார் கல்வி மற்றும் எதிர்காலம் பற்றிய நுட்பங்கள் அறிந்தவர்.

மேல்நிலைப்பள்ளியில் படிக்கும்போதே, ஒரு கருத்தை அப்படியே எளிதில் ஏற்றுக் கொள்ளாமல், மாற்றுக் கருத்து சிந்தனைகளைக் கொண்டவராக ஜுல்பிகார் இருந்தார்.

உதாரணத்திற்கு, 12 ஆம் வகுப்பு முடித்ததும்... பலரின் கனவாக மருத்துவம் மற்றும் பொறியியல் இருக்க, ஜுல்பிகாரோ கணினி சார்ந்த படிப்பில் ஆர்வம் கொண்டார் (அவருக்குப் பொறியியல் படிக்க தகுதியான மதிப்பெண் இருந்தும் கூட).

தான் "B.Sc Computer Science படித்துப் பின்பு MCA படிப்பேன்" என்று 12 ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போதே, அவர் நண்பர்களிடம் பகிர்ந்துள்ளார். அதே போல், **ஜமால் முஹம்மது கல்லூரி**யையும் அவர் முன்கூட்டியே மனதில் தேர்வு செய்துவிட்டார்.

அந்தக் கால கட்டத்தில், கணினி சார்ந்த படிப்புகள் அந்த அளவுக்கு முக்கியம் வாய்ந்தவைகளாகக் கருதப்படவில்லை. ஆனால், அவருக்கு 'கணினி சார்ந்த படிப்புகள் மற்றும் அறிவுகளுக்குத்தான்' பிற்காலத்தில் அதிக தேவைகள் இருக்குமென, முன் கூட்டியே தெரிந்திருக்கின்றது.

இந்த மாற்றுச் சிந்தனைகளே! (Alternative Thinking) மற்றும் அதில் அவர் கொண்ட உறுதியான நம்பிக்கையே! ஜுல்பிகாரின் பல வெற்றிகளுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது.

தேவையான இடத்தில், 'பழையன அகற்றி, புதியன புகுத்திய பண்பாளர்', அதனால் வெற்றியையும் சுவைத்தவர் அவர்.

❖ ❖ ❖



❍ ஜூல்பிகார் அவர்கள், B.Sc Computer Science / MCA படித்த ஜமால் முஹம்மது கல்லூரி, திருச்சி.

வாழ்வை வளப்படுத்தும் அத்தியாயம்

'துண்ணிய கருமம் எண்ணித் துணிக' (கொன்றை வேந்தன்: 52)

என்ற சொல்லுக்கேற்ப, நன்கு தன் திறனை ஆராய்ந்து, அதற்கேற்றபடி செயல்பட்டவர் ஜுல்பிகார்.

12 ஆம் வகுப்பு முடித்ததும் நாங்கள் பல கல்லூரிகளில் விண்ணப்பித்தோம். அதே போல் படிப்புகள் பற்றிய தெளிவு இல்லாமல், எந்தப் படிப்பை கொடுத்தாலும் எடுத்துக் கொள்ளும் மனநிலையில் இருந்தோம். ஆயின் ஜுல்பிகாரோ, B.Sc Computer Science தேர்ந்தெடுத்து, **ஜமால் முஹம்மது கல்லூரி**யில் மட்டுமே விண்ணப்பித்தார். இந்தத் தெளிவினால் தான், அவர் நன்றாகப் பயின்று, நல்ல மதிப்பெண்ணுடன் கணினி செயல்பாட்டுத் திறன்களையும் பெற்றார்.

அதே போல், உயர் கல்வி பயில பல பல்கலைக்கழகங்களில் வாய்ப்புகள் இருந்த போதிலும், MCA படிக்க **ஜமால் முஹம்மது கல்லூரி**யில் மட்டுமே அவர் விண்ணப்பித்து கல்வியைத் தொடர்ந்தார். அவரின் தீர்க்கமான முடிவால் மீண்டும் நன்கு பயின்று, பல்கலைக்கழகத் தேர்வில் தரவரிசை பெற்றார்.

கல்லூரியில் கணினி செய்முறை ஆய்வகத்தை அவர் முறையாக, வெகு சிறப்பாக பயன் படுத்திக் கொண்ட விதத்தின் விளைவே, அவருக்கு 'கணினி மற்றும் மென்பொருள் நிரலாக்க நிபுணத்துவம்' பெற உதவியது.

MCA கடைசி பருவத்தில் (Dec 1997), TCS நிறுவனம் நடத்திய வளாக நேர்காணலில் (Campus Interview) தேர்வான ஒரே மாணவர் ஜுல்பிகார் தான். அதன் பிறகு அந்த நிறுவனத்திலேயே MCA இறுதி ஆண்டு செய்முறை வடிவமைப்பை (MCA Final Year Project) வெற்றிகரமாக நிறைவு செய்தார்.

தான் படிக்கும் போதும் சரி, படித்த பின்பும் சரி; எப்பொழுதும் பயிற்றுவித்த ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களை மிக உயர்வாக மதித்தவர். பள்ளிகள் / கல்லூரியில் தான் படித்த படிப்பினைகளே, தன் வாழ்க்கையில் பல முக்கிய முன்னேற்றத்திற்குப் படிக்கல் எனப் பெருமிதமாக மேற்கோள் இடுவார்!

'அறந்தனை ஒழுகுமதி அறனுமார் அதுவே...'

என்ற ஐங்குறுநூறு கூற்றுப்படி, அறத்தையும், கொண்ட அன்பையும் துறந்திடாமல் வாழ்ந்தவர் ஜுல்பிகார்.

❖ ❖ ❖

ஜூல்பிகார் அவர்கள், B.Sc Computer Science / MCA படித்த ஜமால் முஹம்மது கல்லூரி மற்றும் கணினி அறிவியல் துறை (பழைய கட்டிடம்).

வாழ்வியல் வழிகாட்டி

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக' (குறள்: 391)

கற்றலும் அதன் படி நிற்றலுமே சாலச் சிறந்தது என மொழியும் வள்ளுவம் வழி நின்ற மரபாளர் ஜுல்பிகார். கற்கும் போதே, அதன் நீட்சியைப் பிடிக்க முயன்றவர்.

அவர் MCA படிக்கும்போது, பகுதி நேர வேலைக்குச் செல்லும் முயற்சியை மேற்கொண்டார். அது தன்னுடைய உயர் கல்விக்கு பயனுள்ளதாகவும் மற்றும் தன் செலவினங்களுக்கு உபயோகம் உள்ளதாகவும் அமைய வேண்டு மென நினைத்தார்.

தான் முழு நேர கல்வி படித்துக் கொண்டிருப்பதாலும், படிப்பையே மூலதனமாக வைத்து பகுதி நேர வேலை முயற்சிக்கலாம் என்றும் அதற்கு கணினி மையத்தில் பகுதி நேர ஆசிரியர் பணி பொருத்தமாக இருக்கும் எனவும் நினைத்தார். ஆனால், ஒரு மாணவனை எவ்வாறு ஆசிரியராக ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணி, முதலில் அந்தக் கணினி மையத்தில் மாணவனாகச் சேர்ந்து, தனது திறமைகளை அவர்களிடம் நிரூபித்து... ''அவர்களே தன்னை வேலைக்கு அமர்த்த முயல்வேன்!'' என தனது நண்பர்களிடம் கூறினார்.

எனவே, அப்போது திருச்சியில் இருந்த, அனைத்து கணினி மையத்திற்கும் சென்று அதன் பயிற்சி மற்றும் கட்டண விவரங்களைச் சேகரித்தார். அதனை நன்கு ஆராய்ந்து, திருச்சி, தில்லைநகரில் இருந்த 'பார்க் டெக் (Park Tech)' கணினி மையத்தை தேர்வு செய்தார்.

'பார்க் டெக் (Park Tech)' கை தேர்வு செய்ய அவர் கூறிய காரணங்கள்:

- குறைந்த கட்டணம், ஆனால் பயிற்சியில் சிறந்த கணினி மையம்.
- வீட்டிற்குச் சற்று அருகில் உள்ளதால், தன்னிடம் இருக்கும் மிதிவண்டியில் எளிதாகச் சென்று வர முடியும்.
- 'பார்க் டெக் (Park Tech)' புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சிறிய கணினி மையம். எனவே, அதிக நேரம் பயிற்சி மேற்கொள்ளலாம்.
- புதிய மையம் என்பதால், அவர்கள் மாணவர்களைக் கவர கட்டணத் தள்ளுபடி மற்றும் நுழைவுத் தேர்வில் முதலாவதாக வரும் மாணவர்களுக்கு அதிக கட்டணச் சலுகை போன்ற திட்டங்களை அறிவித்திருந்தார்கள்.

கணினியில் அதிக ஆர்வமும் அறிவும் கொண்ட ஜூல்பிகார் 'பார்க் டெக் (Park Tech)' மையம் நடத்திய தேர்வில் முதலாவதாக வந்து, அதிக கட்டணச் சலுகை பெற்று, அங்கேயே பயிற்சிக்குச் சேர்ந்தார்.

அந்தப் பயிற்சி வகுப்பில், ஜூல்பிகார் MCA படித்துக் கொண்டிருந்த அதே ஜமால் முஹம்மது கல்லூரியிலிருந்து வேறு சில மாணவர்களும் சேர்ந்திருந்தனர். அவர்களில் சிலர் 3 ஆம் ஆண்டு B.Sc Computer Science படித்துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் இயம்பியதாவது, "ஜூல்பிகார் எங்களுக்கு ஒரு வருடம் சீனியராக இருந்த போதிலும், எங்கள் அனைவரையும் நண்பராகக் கருதினார். வகுப்பில் அவரின் ஈடுபாடு மற்றும் அவர் கேட்ட வினாக்களை வைத்தே அவருக்கு கணினியில் மிக ஆழமான புரிதலும் அறிவும் உள்ளது என, நாங்கள் மட்டும் அல்ல; வகுப்பு எடுக்கும் ஆசிரியரும் தெரிந்து கொண்டார். ஆனாலும், ஜூல்பிகார் எந்த வித தலைக்கனமுமின்றி, மிக அமைதியாகவும், ஆர்வத்துடனும் பயின்றார்".

"செய்முறை வகுப்பில் அவர் எங்களுடன் மட்டுமன்றி, ஆசிரியர்களுடனும் சமீபத்திய கணினி மென்பொருள் நிரலாக்க நுட்பங்களை (Latest Computer Programming Techniques) பகிர்ந்து கொள்வார்".

"சில சமயங்களில், செய்முறை வகுப்பில், பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் ஜூல்பிகாரிடம் தன் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வார்களாம். இவரையும் மற்றோரு சக ஆசிரியரைப் போன்று இணையாகக் கருதினார்கள்" என்றார்கள்.

"அவரின் சமீபத்திய தொழில்நுட்ப திறன்களையும், பல்வேறு கணினி அறிவியல் பாடங்களில் அவருக்கு இருந்த ஆழ்ந்த அறிவையும், அங்கே பயின்ற அனைவரும் வியந்ததாகவும்; அதுவே அவர்களுக்கும் கணினி பயிலும் ஆர்வத்தைக் கொடுத்தது" என்றும் நினைவுகளைப் பகிர்ந்தார்கள்.

"அனைத்து கணினி மற்றும் மென்பொருள் ப்ரோக்ராம்மிங் அறிவையும் கொண்ட இவர், 'ஏன்?, மீண்டும் ஒரு சிறிய மையத்தில் படிக்கிறார் என்று எண்ணியபோதுதான், அவர் ஆழமான கற்றலுக்கான தேவையை அறிந்தவர், புலமை பெற்ற பின்பும் கூட தனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்த முனைவதையும், கணிணியியல் அணுகலில் புதிய கண்ணோட்டம் தேவை என்பதையும் அவர் சரியாகப் புரிந்து கொண்டிருந்தாரென" நினைத்து அகமகிழ்ந்தார்கள்.

மேலும் கல்லூரியில் பயின்ற பல ஜூனியர்கள் கூறும்போது, "தானும் மற்ற மாணவர்களும் B.Sc Computer Science படிப்புடன் முடித்துக்கொண்டு

வேலைக்குச் சென்றுவிடலாம் என்று எண்ணியதாகவும், ஆனால் ஜூல்பிகார்தான் MCA படிப்பின் சிறப்பையும், அதை நன்றாகப் படித்து முடித்தால் கிடைக்கும் வேலை வாய்ப்புகள், சிறந்த பெரிய பன்னாட்டு நிறுவனங்களில் நல்ல வேலைகளைப் பெறுவது மட்டுமல்லாமல், இது அதிக செங்குத்துப் பதவி வளர்ச்சியைக் கொண்டு வரும் என்ற முக்கியத்துவத்தைக் கூறினார்".

"உயர் கல்வி மற்றும் தொழில் முனைய விரும்புபவர்களுக்கும் மிகப்பெரிய அங்கீகாரத்தையும், தன்னம்பிக்கையையும் கொடுக்கும் என அறிவுறுத்தினார்".

"ஜூல்பிகார் வெறும் அறிவுரைகள் கூறி கடந்து செல்லும் நபர் அல்ல. அவர் எங்களை பார்க்கும்போதெல்லாம், அன்றைய வார நாளிதழ்களில், வேலை வாய்ப்பு பற்றி பத்திரிகைகளில் வந்த விவரங்களைக் காண்பிப்பார். எப்பொழுது சந்தித்தாலும் மிகவும் மதிப்புமிக்க ஆலோசனைகளையும், தொழில் வழிகாட்டுதலையும் வழங்குவார். அவரிடம் வெற்றுப் பேச்சுக்கே இடம் இருக்காது".

"நாங்கள் உயர்கல்வி படித்ததற்கு ஜூல்பிகார்தான் உந்துதல், கணினி அறிவு பெறவும், வேலை பற்றிய சரியான புரிதலுக்கும் அவரே முழுக்காரணம்... ஜூல்பிகாரின் அறிவுரைகளைப் பின்பற்றாமல் இருந்திருந்தால், ஒரு சாதாரண வேலையில் மட்டுமே இருந்திருக்க முடியும்... அவர், எங்கள் வாழ்வின் முக்கியமான தருணங்களில் வழிகாட்டிய எங்கள் முன்னோடி", என நினைவு கூர்ந்து, அவரை மூத்த சகோதரராகவே எண்ணி மதித்தார்கள்.

ஜூல்பிகாரின் அறிவுரையைப் பின்பற்றிய பலர், தற்போது பலவேறு நாடுகளில் மிகச்சிறந்த பதவிகளிலும், தொழிலில் மேம்பட்டவர்களாகவும், வாழ்க்கையில் வெற்றி கண்டும் உள்ளனர்.

'ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்'

(மகாகவி பாரதியார்–வெள்ளைத் தாமரை: 9)

என்ற வரிகள் இன்னொருவருக்கு கற்றுத் தருவது, அதிலும் 'தேவையானவர்களுக்குக் கற்றுத் தருவது உயர்வு', அஃதே அனைத்து தர்மங்களையும் விட புனிதமானது என்றும் உரைக்கிறது.

❖ ❖ ❖

ஜூல்பிகார்

வினைநலம்

'இலக்கை எதிர் நோக்கிப் பயணிக்கும் ஒருவருக்கு
இடர் தரும் எதுவும் பயணத்தின் சிகப்புக் கம்பளம்'

பயிற்சியை சிறப்பாக முடித்த ஜூல்பிகாருக்கு, அவரின் திறமையை பாராட்டி 'பார்க் டெக் (Park Tech)' கணினி மையத்தின் நிர்வாக இயக்குனர், அவருக்கு அங்கேயே பகுதி நேர பணியை வழங்கினார். அதுவே ஜூல்பிகாரின் நோக்கமாகவும் இருந்தது. காலை மற்றும் மதிய வேளைகளில் கல்லூரியில் உயர்கல்வி படித்துக் கொண்டு, மாலையில் பகுதி நேர பணியினைப் பார்த்தார். இது அவருக்குப் பல்வேறு வகைகளில் பயனளித்தது.

- படிக்கும் போதே தன் உழைப்பின் ஊதியம் பெற்றார். அது சிறிய தொகைதான் என்றாலும், அப்போதைய சூழலில் அப்பணம் அவருக்கு புத்தகம் வாங்கவும், தன் செலவுகளுக்கும் மிகப் பயனுள்ளதாக இருந்தது.
- கல்லூரியில் MCA பாடங்களையும், செய்முறை வகுப்புகளையும் எளிதில் புரிந்து கொள்ள இயன்றது.
- MCA இறுதியாண்டு திட்டத்தை சிறப்பாக முடித்திட உதவியது.
- MCA கடைசி பருவத்தில் வளாக நேர்காணலில் (Campus Interview) தேர்வாவதற்குத் பயன்பட்டது.
- பகுதி நேர வேலை அனுபவம், அவருக்கு வேலையின் நெளிவு சுளிவுகளை முன்னமே கற்றுக் கொடுத்து விட்டதால், பிற்காலத்தில் முழு நேர வேலையில் சேரும்போது, பணிச்சுமை மற்றும் மன அழுத்தம் அவருக்கு ஏற்படவில்லை.

கல்லூரியிலும் கவனம் சிதறாமல் படித்துக் கொண்டு மற்றும் கணினி மையத்திலும் சிறப்பாக பணியாற்றி, '**தான் எதிலும் சிறந்தவன்**' என்று தனது செயல் மூலம் வெளிப்படுத்தினார். பலநிலைப் பணிகளை ஒரே நேரத்தில் கவனம் சிதறாமல், மிக எளிதாகக் கையாண்டார். எந்த நிலையிலும் அவர் மனச்சோர்வு அடையவில்லை. இப்பண்புகளே அவரை கல்வியிலும் சரி, வேலையிலும் சரி... மிக உன்னதத்தையும் உச்சத்தையும் கொடுத்தது.

'துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்' **(குறள்: 651)**

என்ற வாய்மொழிப்படி, அவர் செய்த செயல் அவருக்குத் தேவையான அனைத்து நன்மைகளையும் ஈன்று தந்தது.

❖ ❖ ❖

ஜூல்பிகார் அவர்கள், B.Sc Computer Science / MCA படித்த ஜமால் முஹம்மது கல்லூரி, கணினி அறிவியல் துறை (புதிய கட்டிடம்).

கழறும் அவை அஞ்சான்

நாம் பார்க்கும் வரையில் ஒரு சிலரே... மனோதைரியமும் நிபுணத்துவமும் ஒருங்கே கொண்டு, தேவைப்படும் நேரங்களில் அதை இயல்பாக வெளிப்படுத்தும் ஆளுமை கொண்டவர்களாக இருப்பார்கள்.

தந்தை ஒரு இராணுவ வீரர்; தாய் வீரமும், அறிவாற்றலும் மிக்கவர். இவர்களின் வழித்தோன்றலான ஜூல்பிகாருக்கு தன்னம்பிக்கையும், மனோதைரியமும், அனைத்துத் துறைகளிலும் நிபுணத்துவமும் இயல்பாகவே இருந்தது, 'மீன்களுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை' – என்பதைப் போல.

1998 இல், MCA மூன்றாம் ஆண்டு இறுதி ஆய்வு புற மதிப்பெண் விளக்க விவாதத்தில் நடந்த நிகழ்வு...

மதிப்பீட்டாளராக வந்தவர் அப்போதைய காலத்தில் இந்தியாவின் தலை சிறந்த முதன்மை பொறியியல் கல்லூரியின் ஒரு துறைக்குத் தலைவர். ஜூல்பிகார் எடுத்துக்கொண்ட ஆய்வு 'ஜாவா கணினி மென்பொருள்' ப்ரோகிராம்மிங் பற்றியது.

ஜாவா கணினி மொழி அப்பொழுதுதான் பிரபலமடைந்து கொண்டிருந்தது. அதில் நிபுணத்துவம் கொண்டவர்கள் அப்போது மிக மிகக் குறைவு. ஆனால் ஜூல்பிகார் தனது சொந்த முயற்சியினாலும், படிக்கும் போதே ஒரு கணினி மையத்தில் பகுதி நேர ஆசிரியராகப் பணியாற்றியதாலும், அவரின் திட்ட ஆய்வை புதிய கோணத்திலும், மேம்படுத்தப்பட்ட நிலையிலும் செய்து இருந்தார். அத்துடன் அவர் கற்றதை மறவா தன்மையால் தான்,

'மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை'

(முதுமொழிக்காஞ்சி–சிறந்த பத்து: 3)

என்ற வரிகளுக்கு ஒப்ப வாழ்ந்துள்ளார்.

மதிப்பீட்டாளராக வந்தவர், அப்பொழுதுதான் வளர்ந்துக் கொண்டிருந்த ஜாவா கணினி மொழிபற்றிய ஜூல்பிகாரின் ஆய்வறிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு கட்டத்தில், அவர் அந்த ஆய்வறிக்கையை நிராகரிக்கும் விவாதத்திற்கு சென்றுவிட்டார். பிறகு அவர் ஜூல்பிகாரை வெளியே காத்திருக்கச் சொன்னார்.

ஜூல்பிகாரின் விரிவுரையாளர்களும், சக நண்பர்களும் கலக்கமடைந்தனர். ஏனெனில், அவர்கள் அனைவருக்கும் தெரியும் எவ்வாறு முழு ஈடுபாடுடன் அறிவார்ந்த மேம்பட்ட வகையில் அந்த ஆய்வை ஜூல்பிகார் மேற்கொண்டார்

என்று. ஆனால் ஜூல்பிகார் சிறிதும் அச்சம் கொள்ளவில்லை. "தான் மறுபடியும் அவருக்கு எளிதாகப் புரியும்படி விளக்குவேன்" என்று மிகுந்த மன தைரியத்துடனும், தன்னம்பிக்கையுடனும் எதிர்கொண்டார். அவர் நினைத்தது போலவே மதிப்பீட்டாளர் ஆய்வின் மேன்மையை புரிந்துக் கொண்டு, ஜூல்பிகாருக்கு முதல் மதிப்பெண் வழங்கினார்.

இப்படிப்பட்ட தருணங்களில், நம்மில் பலருக்கு நடுக்கம் ஏற்பட்டுவிடும். ஒன்று மனமுடைந்து விடுவோம் அல்லது குறை கூற ஆரம்பித்து விடுவோம். ஆனால் ஜூல்பிகார் அந்த நிகழ்வை மிக எளிதாகவும், இயல்பாகவும் கையாண்டார் என்பதே அவர் எவ்வளவு தன்னம்பிக்கை, மனோதைரியம் மற்றும் நிபுணத்துவத்தின் மொத்தக் கலவை என்று நமக்குச் சொல்லி விட்டு நகர்கிறது!

'கழறும் அவை அஞ்சான் கல்வி இனிதே' (இனியவை நாற்பது: 12)

'சான்றோர்கள் சபையில் அஞ்சாதவனுடைய கல்வி இனிது' என்பதே இதன் பொருள். அதன்படி, கற்ற கல்வி கொண்டு, பெயரும் புகழும் பெற்றார் ஜூல்பிகார்.

வாசிக்காத நாட்கள்... சுவாசிக்காத நாட்கள்

'ஒதுவது ஒழியேல்' (ஆத்திசூடி:11) மற்றும் ***'தூரல்பல கல்'*** (ஆத்திசூடி:71) இவருக்கு மிகவும் பிடித்தமையால், படிக்கும் பழக்கத்தை மென்மேலும் அதிகப்படுத்தினார்.

கல்லூரியில் சில சமயங்களில் பேராசிரியர்கள் வகுப்புக்கு வர இயலாத சூழ்நிலையில், இலவச நேரங்கள் கிடைப்பதுண்டு. ஜூல்பிகார், அந்த நேரங்களை முறையாக நூலகத்தில் பயன்படுத்திக் கொண்டார்.

தனது நேரங்களை கல்லூரி நூலகத்திலும், விடுமுறைக்காலங்களில் அரசுப் பொது நூலகத்திலும் நன்கு பயன்படுத்தினார்; பல நண்பர்களை நூலகத்திற்கு அழைத்துச் சென்று, அவர்களை உறுப்பினர்களாக்கி படிப்பதற்கு உதவியும், அப்பழக்கங்களை தினசரி மேற்கொள்ளவும் கற்றுக் கொடுத்தவர் ஜூல்பிகார்.

அரசுப் பொது நூலகத்தின் வெளிச் சுவர்களில், மக்கள் சிறுநீர் கழிப்பதைப் பற்றி அவர் புகார் செய்ததை நண்பர்கள் நினைவுபடுத்திக் கூறினார்கள். 'நமக்கெதற்கு வம்பு, இது நம் வேலையல்ல', என்று ஒதுங்கிக்கொள்ளாமல், மிகத் தைரியமாக துணிச்சலுடன், அந்தச் சிறு வயதிலேயே தவறுகளை எதிர்க்கும் தன்மை அவரிடமிருந்தது. பின்பு அதனுடன் நில்லாமல், நூலகத்தின் வெளிச் சுவர்களில் அவரே எச்சரிக்கை வாக்கியங்கள் எழுதியதாக நண்பர்கள் பெருமை கொண்டார்கள்.

உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது, அவர் நண்பர் ஒருவர் அந்தப் பகுதியில் உள்ள மாணவர்களுக்காக, தன் வீட்டில் ஒரு 'பகுதி நேர நூலகம்' (மாலை மற்றும் விடுமுறை நாட்களில்) ஆரம்பிக்க விரும்பினார். மற்ற நண்பர்கள் அந்த முயற்சியை கிண்டல் செய்த போது, ஜூல்பிகார் அந்த நண்பரை ஊக்கப்படுத்தி, தனக்குத் தெரிந்த உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீட்டிற்குச் சென்று, அவர்களிடம் இருந்த புத்தகங்களைத் திரட்டி கொடுத்தார். நண்பர் நூலகம் ஆரம்பிக்க, தன்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் புரிந்தது மட்டுமல்லாமல், தனது ஓய்வு நேரங்களில் அந்த நண்பரின் நூலகத்தை ஒழுங்குபடுத்துவது மற்றும் புத்தகங்களை அந்தப் பகுதி மாணவர்கள் எடுத்து மற்றும் திருப்பிக் கொடுக்கும் செயல்முறையில் அவருக்கு உதவினார். அந்தச் சிறுவயதிலேயே, அவருக்கு நூலகங்களின் மீது தீராக் காதல் இருந்தது.

"ஒரு கோடி கிடைத்தால், என்ன செய்வீர்கள்?" என்ற கேள்விக்கு... "நூலகம் கட்டுவேன்" என பதிலளித்தார் மகாத்மா காந்தி அடிகள். 'தனிமைத் தீவில் தள்ளப்பட்டால், என்ன செய்வீர்கள்?' என்றபோது...

ஜுல்பிகார் அவர்கள், B.Sc Computer Science / MCA படித்த ஜமால் முஹம்மது கல்லூரி நூலகம், திருச்சி.

“புத்தகங்களுடன் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து விட்டு வருவேன்” என்றார் ஜவகர்லால் நேரு. அவர்களின் வரிசையில், இவரும் நூலகம் மற்றும் புத்தகம் வாசிப்பின் முக்கியத்துவம் அறிந்தவராகத் திகழ்ந்தார்.

தினமும் கல்லூரிக்குச் செல்லும் முன்பு, அரசுப் பொது நூலகத்திற்கு முதல் ஆளாகச் சென்று, அனைத்து தினப் பத்திரிக்கைகளையும் இவர் படிப்பது வழக்கம். நாங்கள் கல்லூரிக்கு வீட்டிலிருந்து மிதிவண்டியில் செல்வோம். அந்த 25 நிமிடப் பயணத்தில், தான் காலையில் படித்த பயனுள்ள செய்திகளைப் பற்றி மிக நகைச்சுவையாகக் கூறுவார். அதன்முலம், எங்களுக்கும் அனைத்து பத்திரிக்கைகளைப் படித்த தெளிவு வரும்.

நூலகங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டதின் தொடர்சியாக, அவர் எங்கு சென்றாலும், மற்ற நாட்டிற்கு சென்றாலும்; அங்கும் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள, அவருடைய சிறு வயது நல்ல பழக்கங்கள் அவருக்கு எப்பொழுதும் உதவின.

‘நூலகம் – மனிதனை, முழு மனிதனாக மாற்றும் இடம்!’

‘தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு’ (குறள்: 396)

ESTD: 1951
JAMAL MOHAMED
ACCREDITED BY NAAC WI
TIRUCHIRAPPALLI
GOLDEN JUBILEE
St. Joseph's
175
Higher Secondary School
நன்மைக்கும் உண்மைக்கும்

ஜூல்பிகார்

அறிவைப் பகிர்ந்த வள்ளல்

'செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு' (குறள்: 781)

நல்ல நட்பை விட சிறந்த ஒன்று வேறு இல்லை என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய் மொழிக்கேற்ப.... பலரின் வாழ்க்கையில் நண்பர்களின் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கவையாக இருக்கும். இன்பம், துன்பம், ஏற்றம், இரக்கம், விருப்பு, வெறுப்பு என்று, இப்படி வாழ்க்கையின் பல பரிணாமங்களில் ஏதாவது ஒரு வகையில் ஒரு மாற்றத்தின் உந்துதலாக இருப்பார்கள்.

அப்படிப்பட்ட பெரிய மாற்றத்தின் தொடக்கத்தைத் தான், ஜூல்பிகார் தனது சிறந்த வழிகாட்டுதலின் மூலம், தன்னுடைய நண்பர்கள் பலருக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

'ஒரு மனிதனுக்கு உணவுப் பொருள் கொடுப்பதன் மூலம், நீங்கள் ஒரு வேளைக்கு அவருக்கு உணவளிக்கிறீர்கள்; அதே உணவுப் பொருளை அந்த மனிதனுக்கு விளைவிக்கக் கற்றுக் கொடுங்கள், நீங்கள் அவருக்கு வாழ்நாள் முழுவதும் உணவளிப்பீர்கள்' என்ற கருத்துரைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்.

தனக்குத் தெரிந்த கணினி மற்றும் மென்பொருள் தொழில்நுட்ப அறிவை, தனது மேம்பட்ட கற்பித்தல் மற்றும் எளிய புரிதல் திறன்மூலம் தனது நண்பர்களுக்கும் மற்ற கணினி ஆர்வம் கொண்ட மாணவர்களுக்கும் எந்தக் கட்டணமுமின்றி சொல்லிக் கொடுத்தார்.

தனது அறிவைப் பகிர்வதில், அவர் எந்தவித தயக்கமும் காட்டவில்லை. மாறாக தனக்குத் தெரிந்ததை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதில் அவருக்கு ஆர்வமும், மன மகிழ்வும் இருந்தது.

பாரதியின் புதிய ஆத்திச்சூடி சொன்னது போல,

'ஈதலில் தான் இன்பம் உண்டு'.,

அதில் கல்விக்கு மட்டும் விதிவிலக்கா என்ன?

நண்பர்களோ, மற்றவர்களோ கணினி நுட்ப அறிவு சார்ந்ததாகவோ, மற்ற பாடங்கள் பற்றியோ அல்லது பொதுவான அறிவையோ குறித்து கேட்கும்போது; எந்த விதமான தயக்கம் மற்றும் தலைக்கனமின்றி, உடனடியாக அவர்களுக்கு கற்றுக் கொடுப்பார்.

அதைச் சார்ந்த புத்தகம் மற்றும் பொருட்கள் தன்னிடம் இருந்தால் உடனே கொடுப்பார். இல்லையெனில், தன் செலவில் வாங்கித் தருவார். அடுத்த முறை அவர்களைச் சந்திக்கும் போது, அவர்கள் கேட்ட அறிவு சார்ந்த விவாதமே அவரிடம் காணப்படும்.

உயர்கல்வி MCA வில், கணினி அறிவியலில் இளங்கலை பயின்றவர்கள் மட்டுமல்லாமல் மற்ற பல்வேறு இளங்கலை பட்டப்படிப்பு பயின்றவர்களும் (கணினி அறிவியல் சாராத) பயில்வர். அவர்களில் சிலருக்கு கணினி மற்றும் மென்பொருள் தொழில்நுட்பம் சார்ந்த அறிவு மற்றும் புரிதல் திறன் குறைவாகவே காணப்படும். இவர்கள் ஜுல்பிகாரின் உதவியால் கணினி சார்ந்த அறிவைப் பெற்றது மட்டுமல்லாமல், தேர்வுகளிலும் நல்ல மதிப்பெண் பெற்றனர்.

MCA இறுதி ஆண்டில் அனைவரும் தங்களுக்கு விருப்பமான மென்பொருள் தொழில்நுட்பத்தில் செய்முறை வடிவமைப்பு (ப்ராஜெக்ட்) செய்ய வேண்டும். சிலருக்கு பாடத்தில் புரிதல் திறன் குறைவாக இருந்ததாலும், அவர்கள் கால விரயம் செய்ததாலும், மீதமுள்ள குறுகிய காலத்தில் செய்முறை வடிவமைப்பை (ப்ராஜெக்ட்) முடிக்க வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது.

சில மாதங்களில் ப்ரோக்ராம்மிங் பயின்று, செய்முறை வடிவமைப்பு (ப்ராஜெக்ட்) முடிப்பது என்பது எளிதான விடயமல்ல. செய்வது அறியாமல் குழம்பி இருந்த பலருக்கு ஜுல்பிகார் கைகொடுத்தார்.

அவர்களில் சிலர், ஜுல்பிகாரையே அந்தச் செய்முறை வடிவமைப்பை (ப்ராஜெக்ட்) முடித்துக் கொடுக்க சொன்னபோது "குறுகிய காலம் என்றாலும் கொஞ்சம் முயற்சி மேற்கொண்டால் கற்றுக்கொள்ளலாம்" என நம்பிக்கை கொடுத்தார்.

அது மட்டும் அல்லாமல் குறுகிய காலத்தில் விரைவாகக் கற்று, செய்முறை வடிவமைப்பையும் முடிக்க வேண்டும் என்றால், சொந்தமாக ஒரு கணினி வாங்கிப் படித்தால் வெற்றி நிச்சயம் என்று ஆலோசனையும் அளித்தார்.

முழுமையான கணினி வாங்க இயலவில்லை என்றால், கணினி பாகங்கள் வாங்கி அதை ஒருங்கிணைத்து, நாமே ஒரு குறைந்தபட்ச தேவையுள்ள கணினியை உருவாக்கலாம் என்ற மேலான சிந்தனையும் தந்தார்.

பலருக்கும் கணினி பாகங்கள் பற்றித் தெரியாததால், தானே அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து; அவர்கள் கணினி பாகங்கள் வாங்கவும், அதை ஒருங்கிணைக்கவும் கற்றுக்கொடுத்தார். அதில் மென்பொருள் அனைத்தையும் நிறுவி, ஒரு சில நாட்களில் தயார் செய்து கொடுத்தார். இதற்காக அவர்

தினம் பல மணி நேரம் பேருந்தில் பயணம் செய்து நண்பர்களின் வீட்டிற்கு சென்று அவர்களுக்கு உதவினார்.

அவர் நினைத்திருந்தால் நண்பர்களை தன் இருப்பிடத்திற்கு வரச் சொல்லி, வெறும் ஆலோசனை மட்டும் வழங்கியிருக்கலாம். ஆனால் நண்பர்களுக்கு குறைவான நேரமே இருப்பதை உணர்ந்து, தன் முழு கவனமும் அவர்களின் செய்முறை வடிவமைப்பு (ப்ராஜெக்ட்) வெற்றியடைய, தன்னை வருத்திக் கொண்டு உதவி செய்தார். '**தன்னை வருத்திக் கொண்டாலும் அறத்தான் வருவது இன்பமே**' என்றல்லவா குறள்நெறி கூறுகிறது.

அந்தப் பேருதவியால், பல MCA நண்பர்கள் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற முடிந்தது. வகுப்பில் படிக்கும் சக நண்பர்களை தேர்வு, மதிப்பெண் கண்ணோட்டத்தில் போட்டியாளர்களைப் போலக் கருதாமல், நண்பர்கள் தேர்வில் வெற்றி பெற, ஒரு ஆசிரியரைப் போல வழிகாட்டினார்.

ஜூல்பிகாரின் கற்றுக்கொடுக்கும் இயல்பு, அவரின் நண்பர்களுக்கு பட்டம் பெற மட்டும் உதவவில்லை, மாறாக அவர்களின் வாழ்வின் மற்றுமொரு தொடக்கமாகவும், அந்த வழிகாட்டுதல் இருந்தது.

படிப்பை முடித்து, பெருநகரங்களுக்கு வேலை தேடிச் சென்ற பல நண்பர்களுக்கு, வேலைக்கான எழுத்துத் தேர்வு பற்றியும், நேர்காணல், நேர்முகத் தேர்வை எப்படி எதிர்கொள்வது என்பதைப் பற்றியும் சொல்லிக் கொடுத்தார். இதன் பலனாக பல நண்பர்களுக்கு நல்ல வேலை கிடைத்தது. சிலருக்கு வெளிநாடுகளில் பணிபுரியும் வாய்ப்புகளும் கிட்டியது.

அவரின் நண்பர் ஒருவர் நினைவு கூறும்போது, "தான் எந்த வேலையும் கிடைக்காமல் சிரமப்பட்டதாகவும், சொந்த ஊருக்கே சென்று விடலாம் என்று முடிவெடுத்தபோது... ஜூல்பிகார், நாளை ஒரு பெரிய நிறுவனத்தில் கணினி ஐடி உதவி மேலாளர் பதவிக்கு நேர்காணல் இருப்பதாகவும், தன்னம்பிக்கையுடன் கலந்து கொள்ளுமாறு ஊக்கப் படுத்தியதாக" பதிவு செய்தார். இரவு முழுக்க அவருக்கு மாதிரி நேர்காணல் பயிற்சி கொடுத்துள்ளார். அடுத்த நாள் நேர்காணலுக்குச் சென்ற நண்பர் அதிர்ச்சி அடைந்துள்ளார். சுமார் 1500 பட்டதாரிகளுக்கு மேல் வந்திருந்தார்களாம். ஆனால், வேலையோ ஒன்றுதான்.

ஜூல்பிகார் கொடுத்த தன்னம்பிக்கையில், அந்த நண்பர் நேர்காணலை எதிர் கொண்டார். "ஒரு கணினியை நீங்களே தயார் செய்ய வேண்டுமானால், என்ன பாகங்களைக் கொண்டு செய்ய முடியும்?. அந்தப் பாகங்களின் பெயரும், அதன் பயன்பாடுகள் குறித்தும் சொல்லுங்கள்" என தேர்வாளர்கள் கேட்டபொழுது, நண்பர் கண்முன் தோன்றியது ஜூல்பிகாரின் முகமே!

ஜூல்பிகார் MCA செய்முறை வடிவமைப்பை (ப்ராஜெக்ட்) தயாரிக்கும்போது, கணினியைப் பற்றிச் சொல்லிக் கொடுத்தது அவர் நினைவில் நின்றது. 1500 பட்டதாரிகளுக்கு மேல் பங்குகொண்ட அந்த நேர்காணலில், அவர் ஒருவரே தேர்வாகி வேலைக்குச் சேர்ந்தார். இந்தப் பெருமை அனைத்தும் ஜூல்பிகாரையே சாரும் எனவும், அந்த வெற்றி அவர் தனக்கு அளித்த 'வாழ்வின் தொடக்கம்' என்றும் நெகிழ்வோடு கூறினார்.

'புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை' (நாலடியார்: 29)

புல் நுனியிலிருக்கும் பனித்துளி, உடனடியாக மறைவதைப் போல... வாழ்வினை நினைத்து இப்போதே அறம் செய்க என்ற கூற்றின் படி தொடர்ந்து தனது மேலான அறிவையும், புரிதலையும், எந்த வித பிரதி எதிர்பார்ப்புமின்றி, பிறருக்கு மகிழ்வோடு பகிர்ந்தளித்து, பலரின் வாழ்க்கை மேம்பட காரணமானார்.

தாளாண்மை என்னும் தகைமைக்கண்

அவருடன் MCA பயின்ற சக கல்லூரி நண்பர் நவிலும்போது, "1999 ஆம் ஆண்டின் முற்பகுதியில், நானும் மற்ற நான்கு தோழர்களும் மும்பை கிழக்கு அந்தேரியில், 100 சதுர அடி குடியிருப்பில் தங்கியிருந்தோம். நான் வேலை தேடிக் கொண்டிருந்தேன். மும்பை போன்ற மாநகரத்தில் வேலை கிடைப்பது எளிது என எண்ணித்தான் இங்கு வந்தேன். ஆனால், பல முறை முயன்றும் கூட எனக்கு வேலை கிட்டவில்லை.

நான் அணுகிய பல நண்பர்களில் ஜூல்பிகாரும் ஒருவர். ஏனெனில், ஜூல்பிகார் மும்பை TCS (Tata Consultancy Services) நிறுவனத்தில் பணி புரிந்து கொண்டிருந்தார். அவர் வேலை வாய்ப்பு தொடர்பாக நண்பர்களுக்கு உதவுகிறார் என்றும், அவரால் பல நண்பர்கள் பலனடைந்தது பற்றியும் அறிந்தேன். எனக்கு ஜூல்பிகாரிடம் நேரடிப் பழக்கம் இல்லை. ஏனெனில், நான் மாலை நேர MCA வகுப்பில் படித்த மாணவன். இருந்தாலும், அவர் வேலை தேடுபவரின், மனநிலையை நன்கு புரிந்து கொண்டிருந்ததால், நான் அவரை சந்திக்கும் போதெல்லாம்... அவர் வேலை வாய்ப்புகள் பற்றிய தகவல்கள் கொடுப்பது மட்டுமல்லாமல், நம்மை உற்சாகப்படுத்தும் நேர்மறை எண்ணங்களை விதைப்பார். நான் பல நேர்காணல்களில் தோல்வியடைந்த போதும், தன்னம்பிக்கையை இழக்கும் தருணங்களிலும், உடனே நான் அணுகுவது ஜூல்பிகாரைத்தான்.

'விழுந்தால்
அழுவதை விடுத்து
எழுவதை முடுக்கு!'

என்று இங்கர்சால் சொன்ன தத்துவத்திற்கேற்ப என்னைத் தேற்றுவார்.

அவர் என்னை ஆறுதல் படுத்துவது மட்டுமல்லாமல், அடுத்த கட்டமாக என்ன செய்ய வேண்டுமென்ற நல்ல ஆலோசனைகளை வழங்குவார். எப்பொழுதெல்லாம் நான் தன்னம்பிக்கையை இழந்து அவருடன் பேசுகிறேனோ, அன்றைய தினமே அலுவலகத்திலிருந்து நேரடியாக அவர் இடத்திற்கு செல்லாமல், நான் தங்கியிருந்த இடத்திற்கு வந்து, என் நலம் விசாரித்து விட்டுச் செல்வார். பின்பு அடுத்த நாள் காலை, அவ்வாறே அலுவலகத்திற்கு போகும்போது, என்னை சந்தித்து விட்டு செல்வார். அவர் அப்படிச் செய்ய வேண்டுமென்ற தேவையே இல்லை. ஆனாலும், நண்பர்களிடம் கொண்ட அக்கறை காரணமாக அவர் அவ்வாறு செய்வார்.

1998 ஆம் ஆண்டில் தொலைபேசி வைத்திருப்பது மிகவும் அரிதானது என்பதால், நாங்கள் தங்கியிருந்த இடத்திலிருந்த மற்றோரு நண்பரின் எண்ணை, நான் வேலை வாய்ப்புகள் தொடர்பான தகவல்களைப்பெற ஜூல்பிகாரிடம் கொடுத்திருந்தேன். அவரின் முயற்சியால், அவர் எனக்காகப் பரிந்துரைத்த வேலையை... எங்களது அறையில் தங்கியிருந்த மற்றோரு நண்பர், தனக்காகத்தான் ஜூல்பிகார் பரிந்துரைத்தாரென எண்ணி... அந்த நேர்காணலில் கலந்து கொண்டு வெற்றி பெற்றார். இந்த நண்பரும் மிகத் திறமையானவர். என்னிடம் தொலைபேசி இல்லாததால் ஏற்பட்ட குழப்பத்தின் உண்மை நிலவரம் தெரிந்தபோது, அந்த நல்ல நண்பர், தனது வேலையைத் துறக்கவும் தயாரானார்.

கைக்கு எளிதாக எட்ட வேண்டிய வேலையைத் தவறவிட்டுவிட்டோமே, இந்த வாய்ப்பு இனி எப்போது அமையுமோ, எனக்கு அதிர்ஷ்டமே இல்லை என்று எண்ணியவாறே நான் எதிர்மறையான எண்ணங்களால் சூழப்பட்டேன். அதனால் நான் மிக மனஅழுத்தத்திற்கு உள்ளானேன். என் விரக்தியை ஜூல்பிகாரிடம் பகிர்ந்தேன். நான் எதிர்பார்த்தது என்னவென்றால், ஜூல்பிகார் எனக்கு ஆதரவாகப் பேசுவார். அவரும் கோபமடைவார். எனது எரியும் விரக்தியில் இன்னும் கொஞ்சம் எண்ணெயை ஊற்றுவாரென்று. ஆனால் ஜூல்பிகாரோ இந்த நிகழ்வைக் கடந்து போகச் சொன்னார். எனது தற்போதைய நிலை மாறும் என்றும், இனி வரும் நேர்காணலில் வெற்றி பெறுவதற்கான தயாரிப்புகளில் கவனம் செலுத்துமாறு ஆலோசனைகளைக் கூறினார். நடந்ததெல்லாம் நன்மைக்கே, எனக்கு வேலை தாமதமாவதற்கு, வேறு நல்ல மிகப்பெரிய வாய்ப்பு இருப்பதாக ஆறுதல் படுத்தினார். அவரின் அறிவுரைகளினால், என் மன அழுத்தம் சீராகி அமைதி ஏற்பட்டது'' எனப் பூரிப்போடு பகிர்ந்து கொண்டார்.

''ஜூல்பிகாரின் மன முதிர்ச்சியைக் கண்டு நான் வியந்து நின்றேன். அந்த நாள், அவரின் நல்லுரை எனக்கு நல்ல அனுபவத்தையும், பக்குவத்தையும் கொடுத்தது. நான் என்னுடைய நண்பர்களுடன் மீண்டும் பழையபடி இயல்பாகப் பழக உதவியது. ஜூல்பிகாரின் அறிவுரை என்னை அடுத்த கட்ட முதிர்ச்சிக்கு அழைத்துச் சென்றது. அவரின் வார்த்தையின்படி, எனக்கு அடுத்த சில மாதங்களில் மிகப்பெரிய பன்னாட்டு நிறுவனத்தில் நல்ல வேலை கிடைத்தது'' என வார்த்தையில் வாழ்வினை வரைந்தார்.

'முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்' (குறள்: 93)

முகத்தால் விரும்பி, இனிமையுடன் நோக்கி, உள்ளம் கலந்து இன்சொற்களைக் கூறும் தன்மையில் உள்ளதே அறமாகும்.

❖ ❖ ❖

வையத் தலைமைகொள்

1998 இல் மும்பையில் உள்ள TCS (Tata Consultancy Services) நிறுவனத்தில், முழு நேரப் பணியில் இருந்தாலும், அவர் தாகம் முழுவதும், தன் மொத்த திறமைகளைக் கொண்டு மிக அதிகம் பயன் பெற வேண்டும்; அதே வேளையில் மிக விரைவாக முன்னேற வேண்டும் என்ற சிந்தனையே அவரிடம் மேலோங்கி நின்றது.

இவரின் திறமைகளைக் கண்டு TCS நிறுவனம், 1999 இல், ஜூல்பிகாருக்கு சில காலத்திற்கு அயர்லாந்து நாட்டிற்குச் செல்லும் வாய்ப்பை அளித்தது. ஆனால், மாற்று சிந்தனைகள் கொண்ட ஜூல்பிகாரோ, அந்த வாய்ப்பை மறுத்து விட்டார். குறுகிய கால வெளிநாட்டுப் பயணம், தன் திறமைகளுக்கு ஏற்றப் பலன் கிடைக்காது என முடிவு செய்து தன் வேலையை மிகத் துணிச்சலாகத் துறந்தார். நண்பர்கள் "ஏன்? இந்த முடிவு" என்று கேட்டபோது, "தனது முழு படிப்பு மற்றும் பணி அனுபவங்கள் வைத்து, ஒரு கணினி மற்றும் மென்பொருள் ஆலோசகராக வெளிநாடு சென்றால் குறுகிய காலத்தில் விரைவாக முன்னேறலாமெனத்" துணிச்சலான மாற்று சிந்தனை கொண்டிருந்தார்.

'எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்' (குறள்: 489)

கிடைப்பதற்கு அரிய காலம் வாய்க்கும்போது அதை பயன்படுத்திக் கொண்டு அப்போதே செயற்கரிய செய்து முடிக்க வேண்டும் என நன்கு அறிந்திருந்தார்.

அவரின் எண்ணத்திற்கும், முடிவிற்கும் ஜூல்பிகாரின் பெற்றோர் எந்த வித மறுப்பும் கூறவில்லை. மாறாக, அவர் விருப்பம் போலச் செய்வதற்கு ஜூல்பிகாருக்கு முழு சுதந்திரம் கொடுத்து இருந்தனர். பெற்றோரின் ஆதரவு அவருக்குப் பன்மடங்கு பலத்தைக் கொடுத்தது.

'தன்னிறைவுடன் செய்யும் பணியின் நிறைவில்
இறையை உணர முடியும்'

என்ற போதனைப்படி இவரது நிலைப்பாடு இருந்தது. எனவே, ஜூல்பிகார் துணிந்து, வெளிநாட்டில் நேரடியாக கணினி மற்றும் மென்பொருள் தொழில் நுட்பங்களுக்கு ஆலோசகராக முயற்சித்து, அதற்காக மும்பையில் நடைபெற்ற நேர்காணலில் தேர்வானார்.

ஜுல்பிகார்

பின்னர், இங்கிலாந்து சென்ற ஜுல்பிகார், அங்குப் பல ஐ.டி (IT) நிறுவனங்களுக்கு சில சமயங்களில் ஆலோசகராகவும், சில சமயங்களில் உயர்நிலை திட்ட வடிவமைப்பிலும் (Project) பணியாற்றினார். எந்நிலையிலும், அவர் ஒரு நிறுவனத்தை முழுவதும் சாராதவராகவே இருந்தார்.

தன் கணினி மற்றும் மென்பொருள் தொழில்நுட்பங்களுக்கான நிபுணத்துவத்தில் அசாத்திய திறன் படைத்தவராகவும், தன்னம்பிக்கை கொண்டவராகவும் இருந்ததால்... அவர் தனது வேலை பற்றி எந்நிலையிலும் அச்சம் கொள்ளவில்லை. நிறுவனங்களும் அவரின் திறமையைக் கண்டு, அவருக்கு தகுந்த பதவி மற்றும் நிலையை வழங்கின.

2000 இல் வெளிநாடு சென்ற அவர் 2021 இல் இயற்கை எய்தும் வரை இங்கிலாந்திலேயே உயர்நிலைப் பதவியிலிருந்தார்.

'ஞாலம் கருதினுங் கைகூடுங் காலம்
கருதி இடத்தாற் செயின்' (குறள்: 484)

ஏற்ற காலத்தையும் இடத்தையும் அறிந்து ஒரு செயலைச் செய்தால், பூவுலகம் முழுமையையும் வேண்டினாலும் அது கைவசப்படும் என்பதை உணர்ந்ததனால் வாழ்வில் ஏற்றம் கண்டார்.

❖ ❖ ❖

ஜுல்பிகார்

நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்

'அடக்கம் அமரருள் உய்க்கும்' (குறள்: 121) என்ற வரிகள் மற்றும் ***'உடையது விளம்பேல்'*** (ஆத்திசூடி: 5) இயம்புவது போல அடக்கத்தை தன்னகத்தே கொண்ட, தற்பெருமை பேசாத மனிதன், உயர்ந்த இன்பமான உலகில் அமர்த்தப்படுவார். இது ஜூல்பிகார் அவர்களின் வாழ்வில் மெய்பிக்கப்பட்டது.

'எளிமை, நேர்மை, உண்மை
என்பவை இல்லாமல் எந்த காலத்திலும்
நமக்கு உயர்வு இல்லை'

என்பது அப்துல் கலாம் அவர்களின் கருத்து. ஜூல்பிகாரிடம் சில நிமிடங்கள் பேசினாலே புரிந்துவிடும், அவர் எவ்வளவு எளிமையானவர் என்று. வேலைக்குச் சென்றபின், தன் நிலையிலிருந்து பல மடங்கு உயர்ந்த ஜூல்பிகாருக்கு பொருளாதாரத்தில் மாற்றங்கள் வந்ததே தவிர; அவரது குணங்களிலும், எண்ணங்களிலும், செயல்களிலும் எந்த மாற்றமும் இல்லை. அவர், அதே எளிய வாழ்க்கையை பின்பற்றினார். எந்த இடத்திலும், தன் பேச்சிலும், செயல்களிலும் கர்வம் வெளிப்பட்டுவிடக்கூடாதென அவர் மிகக் கவனமாகவும், தெளிவாகவும் இருந்தார். ஆடம்பர வாழ்க்கை மற்றும் தேவையற்ற செலவினங்களைத் தவிர்த்தார்.

சக்திவாய்ந்த ஆளுமை ஜூல்பிகாரிடம் இருந்த போதிலும், அவர் இரத்தத்திலே ஊறியிருந்த போதிலும், அவர் தன்னை சுற்றியுள்ளவர்களை வெல்ல ஒருபோதும் அதைப் பயன்படுத்தியதில்லை. தன்னுடைய மேலான குணங்களாலும், பிரதி உபயோகம் பார்க்காமல் மற்றவர்களுக்குச் செய்த அளப்பரிய உதவிகளாலும், இயல்பாக மக்களை ஈர்க்கக் கூடிய ஆகச் சிறந்த மனிதராக அவர் விளங்கினார்.

2000 இல் இங்கிலாந்து சென்ற அவர், ஒவ்வொரு ஆண்டும் திருச்சி வந்தார். நண்பர்களைக் காண அவர் தனது பழைய சைக்கிளிலேயே புறப்படுவார். மாணவப் பருவத்தில், அவர் நண்பர்களைக் காண வீட்டிற்கு செல்லும்போது, நண்பர்களின் வீட்டு வாசற்படிகளில் அப்படியே அமர்ந்து அவர்கள் வரும் வரை காத்திருப்பார் அல்லது அங்கு அமர்ந்தவாறே பேசுவார். அந்தப் பழக்கத்தை அவர் மிகப்பெரிய நிலைக்கு வந்தும் 20 ஆண்டுகளாக மாற்றிக் கொள்ளவில்லை (கடைசியாக அவர் திருச்சிக்கு வந்திருந்த ஆகஸ்ட் 2019 வரை).

கல்லூரியில் முதலாமாண்டு B.Sc Computer Science பருவத் தேர்வில், அவருக்கு துணைப் பாடமாகக் கணிதம் இருந்தது. நாங்கள் அவருக்குப் பக்கத்து வகுப்பு. முதலாமாண்டு பருவத் தேர்வு முடிவுகள் வந்த சமயமது. ஒரு பேராசிரியர் எங்களுக்கு வகுப்பு எடுத்துக் கொண்டிருக்கும்போது, மொத்த கல்லூரியிலேயே ஒரே ஒரு மாணவன்தான் கணிதத்தில் முழு மதிப்பெண் பெற்று நம் கல்லூரிக்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளார் எனக் கூறினார். சில நாட்கள் கழித்து, ஜூல்பிகாரும் நாங்களும் வீட்டிலிருந்து மிதிவண்டியில் கல்லூரிக்குச் செல்லும்போது, 'யார்? அந்தக் கணிதத்தில் முதல் மாணவன்' என்பதைப் பற்றி விவாதிக்கும்போது, அது தான்தானென ஜூல்பிகார் எந்த வித கர்வமும் இல்லாமல் கூறினார். நாங்கள் அவரின் தன்னடக்கத்தைக் கண்டு வியந்தோம். அவரின் உடை, உணவு, பயணங்கள் அனைத்தும் எளிமையானதாகவே இருந்தன. தான் மற்றவர்களைவிட அறிவிலும், பதவியிலும், செல்வத்திலும் உயர்ந்தவன் என்ற எந்த ஒரு அகந்தையும், எந்த ஒரு நிலையிலும் வெளிப்படவில்லை.

'நிலையின் தீரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது' (குறள்: 124)

தன் வாழ்க்கை நெறியில் மாறுபடாமல், நேர்மையான வழியை விட்டு விலகாது, அடக்கத்துடன் வாழ்பவரின் உயர்வு, மலையின் உயர்வைவிட மிகவும் பெரிதாகும். இவ்வழி பின்பற்றி வாழ்ந்தவர் ஜூல்பிகார்.

ங‌ப் போல் வளை

தன்னலம் கருதாமல், எந்நிலையிலும் பிறருக்கு உதவும் குணங்கள் மற்றும் அறிவு பகிர்தல் ஆகிய இரண்டு நற்குணங்களும் ஜூல்பிகாரை முதன்மைப் படுத்தினாலும், இவை இரண்டும் ஒரு தனி மனிதனிடம் ஒருங்கே இருப்பது அரிதாகக் காணப்பட்டாலும், அவருடைய மேலோங்கிய பண்புகள் என நண்பர்கள் கருதுவது '**குறை கூறாமை மற்றும் புறம் பேசாத**' பண்புகளைத் தான்.

குறை கூறுவதும், புறம் பேசுவதும் மனிதனிடம் இயல்பாகக் காணப்படும் பண்புகள். மனிதர்களுக்கிடையே இதன் சதவிகிதம் அதிகமாகவோ, குறைவாகவோ இருக்குமே தவிர; ஒரு மனிதன் ஏதாவது ஒரு நேரத்திலாவது, இதைத் தவிர்க்க முடியாமல் போகிறது.

ஆனால் ஜூல்பிகாரோ, எந்த நிலையிலும் யாரையும் குறை சொல்வதில்லை. தன்னுடைய வெற்றிகளுக்கு மற்றவர்களே காரணம் என்று கூறும் ஜூல்பிகார், தனது தோல்விகளுக்கு யாரையும் கை காட்டுவதில்லை. தோல்வியிடமிருந்து பாடங்கள் கற்றுக் கொண்டு, அது மீண்டும் நிகழாமல் பார்த்துக் கொள்வார். வெற்றி தோல்விகளை ஒரே போன்று தான் பாவித்தார். வெற்றியினால் அவர் களிப்படைவதும் இல்லை; தோல்வியால் அவர் மனமுடைவதுமில்லை.

'ஔவியம் பேசேல்' (ஆத்திசூடி: 12) என்பது இவர் குடிப்பிறந்த பண்பு. யாரிடத்தும் இவர் பொறாமை வார்த்தைகளைப் பேசவில்லை.

'ங‌ப் போல் வளை' (ஆத்திசூடி: 15) என்பதற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டினார். 'ங' என்னும் எழுத்தானது வாக்கியத்தின் முதலில் வராது. ஆனால் அஃது தான் பயனுள்ளதாக இருந்து தன் வருக்க எழுத்துக்களை தழுவும். அது போல நாமும் நம்மைச் சார்ந்தவர்களால் என்ன பயன் என்று பாராமல் அவர்களைக் காக்க வேண்டும் என எண்ணினார்.

தன் சொந்த முயற்சிகளால் அவர் மேன்மை கண்ட போதும், இந்தச் சமூகம் தனக்கு ஏதும் செய்யவில்லை என்றோ, தனி மனிதர்களைக் குறை சொல்லியோ யாரும் கண்டதில்லை. தோல்விகளை எளிதில் அடைய மாட்டார், அவ்வாறு ஆனால் கூட தனது தோல்விகளுக்கு தானே பொறுப்பேற்பார். தோல்விகளுக்காக அவர் அஞ்சியதும் இல்லை, துவண்டு போனதுமில்லை.

பேரறிஞர் அண்ணா சொன்னது போல்,

'வெற்றியைக் கண்டு வெறி கொண்டு ஓடாதவர்
தோல்வியைக் கண்டு துவண்டு விழாதவர்'

ஒருவரை பற்றி மற்றவரிடம் தாழ்த்திப் பேசமாட்டார். அவ்வாறு, மற்றவர்கள் இவரிடம் இன்னொருவரைப் பற்றி பேசும்போது, உடனே அந்த நிகழ்வைத் தவிர்த்து விடுவார். ஒருவர் இல்லாதபோது, அவரைப் பற்றி பெருமையாகப் பேசலாம் ஆனால் இகழ்வாக பேசுவது தவறென, யாராக இருந்தாலும் நேரடியாகக் கூறிவிடுவார். அவ்வாறு, ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நண்பர்களுக்கிடையே பேசிக் கொள்ளும் போது, அந்த இடத்தில் ஜூல்பிகார் இருந்தால் உடனே நண்பர்களை கண்டிப்பார். அவர்கள் அப்படியும் புறங்கூறும் பேச்சுக்களை நீட்டித்தால், 'இது எந்த விதத்திலும் யாருக்கும் பலனளிக்காது' எனக் கூறி அந்த இடத்தை விட்டு நகர்ந்து விடுவார்.

தீய பண்புகள் மற்றும் தேவையற்ற பேச்சுக்கள் கொண்ட நண்பர்களிடம் இருந்தும் தன்னை வெளிப்படையாக துண்டித்துக் கொள்வார். நண்பர்கள் தவறு செய்யும்போது ஒரே ஒரு முறை அவர்களுக்கு அறிவுரை வழங்குவார். அவர்கள் ஆக்கபூர்வமாக மாறுவதற்கு உதவிகள் செய்வார், துணை நிற்பார். அதையும் மீறி மீண்டும் தேவையற்ற பண்புகள் அந்த நண்பர்களிடம் தொடர்ந்தால் உடனே அவர்களிடமிருந்து விலகி விடுவார். அதே போல், வீண் வதந்திகளை அவர் என்றுமே ஒரு பொருட்டாக நினைத்ததுமில்லை, அதில் சிக்கியதுமில்லை.

'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு' (குறள்: 784)

நட்பு என்பது சிரித்து மகிழ்வதற்காக அல்ல; நண்பர்கள் நல்வழி தவறிச் செல்லும்பொழுது இடித்துரைத்து திருத்துவதற்காகும். இக்குறளை தன் வாழ்நாளில் கடைபிடித்தார்.

இந்த அரிய வகைப் பண்புகள் அவருக்கு ஆக்கப்பூர்வமான வளர்ச்சியைக் கொடுத்தது மட்டுமல்லாமல்; குடும்பத்தார்களும், நண்பர்களும் அவரை ஒரு மாமனிதனாக அடையாளம் காட்ட மிக முக்கிய காரணங்களாகத் திகழ்கின்றன.

❖ ❖ ❖

நேர்படப் பேசு

'நட்டார்ப் புறங்கூறான் வாழ்தல் நனிஇனிதே'

(இனியவை நாற்பது–பாடல்: 19)

தன்னிடம் நட்பு கொண்டவர்களைப் பற்றி புறங்கூறாதவனாய் வாழ்வது மிக இனியது.

'ஆம் என்றால் ஆம்; இல்லை என்றால் இல்லை' இந்தக் கோட்பாட்டை சிறு வயது முதல் பின்பற்றினார் ஜூல்பிகார். அவரிடம் பெரிய அளவில் எந்த ஒளிவு மறைவும் இல்லை.

ஒருவரைப் பற்றி மற்றவரிடம் குறை கூறும் பழக்கம் அவரிடம் இல்லையென்றாலும், ஒருவருக்கு திருத்தம் தேவைப்படும் தன்மைகளை, எந்தத் தயக்கமுமின்றி துணிச்சலாக நேரடியாக அவர்களிடமே கூறிவிடுவார்.

பாரதியார் விளம்பிய *'ஒடிப்புறப் பேசு'* (புதிய ஆத்திசூடி: 107), *'நேர்படப் பேசு'* (புதிய ஆத்திசூடி: 61) என்ற இரண்டுமே இவருக்கு அப்படியே பொருந்தின. ஒளிவு மறைவு இல்லாமல், எதையும் சுற்றி வளைத்து பேசாமல் நேரடியாக, தைரியமாக பேசும் வழக்கம் கொண்டிருந்தார்.

நண்பர் ஒருவர் ஜூல்பிகாரைப் பற்றி நினைவு கூறும்போது, "1997 இல் நான் ஜமால் முஹம்மது கல்லூரியில் இயற்பியலில் முதுகலை முடித்து விட்டு திருச்சியில் ஒரு அறை எடுத்துத் தங்கி வேலை தேடிக் கொண்டிருந்தேன். எனவே, மாதாமாதம் பெற்றோரிடமிருந்து பணம் வாங்கித்தான் பொழுதைக் கழித்தேன். எதையும், ஒளிவு மறைவு இல்லாமல் பேசும் ஜூல்பிகார், என்னைப் பார்த்து ஏன் பெற்றவர்கள் பணத்தை வீணடிக்கிறாய். வேலை தேடுவதை நீ உன் வீட்டிலிருந்தவாறே செய்யலாமே, நீ ஏன் காலத்தையும் பணத்தையும் விரயம் செய்கிறாய்? என்று வெளிப்படையாகச் சொன்னார். அப்பொழுது அவரின் அக்கறை எனக்குப் புரியவில்லை. நான் பிறகு வேலைக்குச் சென்று சம்பாதிக்கும்போதுதான், அவரின் நேர்மறையான விமர்சனம் எனக்குப் புரிந்தது" எனப் பூரிப்படைந்தார்.

ஒரு நண்பனிடம் இவ்வாறு கூறினால், அவன் தன்னை தவறாக நினைப்பானே என்று கூட அவர் பாராமல் கூறிய கூற்றுமூலம்... அவர் என் நலனில் அக்கறை கொண்டுள்ளார் என்பது மட்டுமல்லாமல் அவர் நண்பர்களின் பெற்றோர்களையும் எவ்வளவு மதிக்கிறாரெனப் புரிந்தது.

அவர்கள் தன்னைப் பற்றி தவறாக எண்ணுவார்கள் என, அவர் தயக்கம் காண்பிக்க மாட்டார். தன் மனதிற்குத் தோன்றிய ஆக்கபூர்வமான கருத்துக்களை, எந்த வித ஒளிவு மறைவின்றிக் கூறுவார்.

அவரின் விமர்சனங்கள் நெற்றிப் பொட்டில் அடித்தது போல் இருக்கும். தான் அடுத்தவர்களை ஈர்க்க வேண்டும் என செயற்கையாகவோ, பொய் சொல்வதோ, நல்ல பெயர் எடுக்க மென்மையாகக் கண்டுகொள்ளாமல் இருக்கும் தன்மையோ, தனக்குத் தேவையில்லையெனக் கருதினார்.

அதே போல் எந்த ஒரு சூழ்நிலையிலும், அவர் யாருக்கும் பயப்படவில்லை. ஒருவர் தவறு செய்யாதபோது எதற்கும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என தீர்க்கமாக தன் வாழ்வில் பின்பற்றினார். இதன் விளைவாகவே, அனைவரும் அவரை **'நேர்மை மற்றும் தைரியம்'** கலந்த உருவமாகப் பார்த்தார்கள்.

'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்'

என்ற பாரதியின் இயம்புதலுக்கேற்ப, மனதில் எந்த அப்பழுக்கும் அற்ற ஜூல்பிகார் எதையும் வெளிப்படையாகவே பேசுவார்.

'கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்நோக்காச் சொல்' (குறள்: 184)

ஒருவர் செய்யும் குறையை அவர் இருக்கும் போதே நேரடியாகக் கூட சொல்லலாம், ஆனால் அவர் இல்லாதபோது சொல்லாதே என்கிற வள்ளுவரின் வாய் மொழிக்கேற்ப செயலாற்றியவர்.

❖ ❖ ❖

ஈதல் இசைபட வாழ்தல்

'உண்பித்து உண்'
'மகிழ்வித்து மகிழ்'
'வாழ்வித்து வாழ்'

என்ற வள்ளுவ நெறி, இவர் வாழ்வு முழுவதும் நிறைந்து நின்றது!

இங்கிலாந்து சென்று பொருள் ஈட்ட ஆரம்பித்த ஜூல்பிகார், தன்னுடைய பகுதியில் வாழும் நண்பர்கள் பலருக்கும், தன்னுடன் பயின்ற பல நண்பர்களுக்கும், தனக்குத் தெரிந்தவர்களுக்கும் என அனைவருக்கும் உதவி செய்வதில் ஒரு முதலுதவிப் பெட்டகமாகத் திகழ்ந்தார். பொருளீட்டும் முன்பு அறிவு பகிர்தல், வழிகாட்டுதல் என அறிவு சார்ந்த உதவிகளைச் செய்து கொண்டிருந்த அவர், வேலைக்குச் சென்றபின்பு பொருளுதவியையும், தனது உதவும் இயல்பில் இணைத்துக் கொண்டார்.

'ஆற்றுந் துணையால் அறஞ்செய்கை முன்இனிதே'
(இனியவை நாற்பது–பாடல்: 06)

'**கூடியவரை அறம்பட வாழ்வதே இனிய வாழ்க்கை**' அப்படியொரு அறவாழ்வை ஜூல்பிகார் வாழ்ந்தார். அவரால் பயன் அடைந்தவர்கள் ஏராளம். அவரின் உதவும் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது...

- அறிவு பகிர்தல்
- தகவல்கள் சேகரித்துக் கொடுப்பது
- வேலை வாய்ப்பு சார்ந்த உதவிகள்
- கல்விக் கட்டணங்கள் செலுத்துதல்
- மருத்துவ சிகிச்சைகளுக்கு
- முதியோர்களுக்கு
- மாற்றுத் திறனாளிகளுக்கு
- திருமணத்திற்கு
- வழிபாட்டுத் தலத்திற்கு
- இன்னும் ஏராளம்...

'முட்டில் பெரும்பொருள் ஆக்கியக்கால் மற்றது
தக்குழி ஈதல் இனிது' (இனியவை நாற்பது–பாடல்: 19)

ஜூல்பிகார்

குறையில்லாத பெரும் பொருளை தேடிச் சம்பாதித்தால் அப்பொருளை தகுதி வாய்ந்த தேவையுள்ளோருக்கு கொடுத்து உதவுவது இனியது என்பதை பின்பற்றினார். அவர் மற்றவர்களுக்குக் கொடுத்த எதையும் திரும்ப வாங்கிக் கொள்ளவில்லை. வாங்கும் எண்ணமும் அவரிடம் இல்லை. அவர் தன்னை சார்ந்தவர்களுக்கு ஏதாவது ஒரு வகையிலாவது உதவி இருப்பார். ஆனால், அவர் யாரிடமும் எந்த உதவியும் கேட்டதாக எங்களுக்கு நினைவில்லை.

'ஈடில்லதற் கில்லை பாடு' (பழமொழி–நானூறு: 71)

அதாவது பெரியோர் அகந்தையற்று, தன்னிடம் உள்ளவற்றைக் கொண்டு பிறர்க்கு உதவுவர். அதுபோல மண்ணில் வாழ்ந்தவர் ஜூல்பிகார் அவர்கள். யாருக்காவது உதவி தேவையெனில், முதல் ஆளாகத் தனது கரத்தை நீட்டுவார். தன்னால் முடிந்த உதவிகளைச் செய்வார்.

அவரைப் பற்றிப் பேசும் போது, அதிகப்படியான நண்பர்கள் கூறுவது:

- "ஜூல்பிகார் எனக்கு உதவியுள்ளார்"
- "என்னுடைய இக்கட்டான தருணங்களைக் கடக்க அவர் ஒரு காரணம்"
- "அவர் செய்த உதவிகளை என்றுமே சொல்லிக்காட்டியதில்லை"
- "என்ன உதவிகள் அவர் செய்திருந்தாலும், அடுத்த முறை அவர் என்னைச் சந்திக்கும் போதோ, நான் அவரைச் சந்திக்கும் போதோ, அவர் முன்பு எவ்வாறு பேசுவாரோ, அக்கறை காட்டுவாரோ அவ்வாறே பழகுவார்"
- "எந்த ஒரு நிலையிலும், நான் உனக்கு உதவியுள்ளேன் எனக் கூறி, சங்கடத்தை ஏற்படுத்த மாட்டார். மாறாக, வெகு இயல்பாக எப்பொழுதும் போல் இருப்பார்"

சரியான நேரத்தில், தேவையான உதவிகளைச் செய்து...
அனைவருக்கும் முதலுதவிப் பெட்டகமாகத் திகழ்ந்தார்!

'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு' (குறள்: 231)

என்ற வாய்மொழி வழிநின்ற வாழ்வின் இலக்கணம்!

❖ ❖ ❖

ஜூல்பிகார்

சிறகடிக்கும் பறவை

பயணங்களில் அதிக நாட்டமுடையவர் ஜுல்பிகார். ''இங்கிலாந்து சென்ற பிறகு ஒவ்வொரு வாரக் கடைசியிலும், அனைத்து விடுமுறை நாட்களிலும் பல்வேறு இடங்களுக்குச் செல்வேன், அங்கிருக்கும் சிறப்புப் பகுதிகளுக்குச் சென்று, அந்த அனுபவத்தைப் பெருக்குவேனென்று'' அவர் பலமுறை கூறியுள்ளார்.

''பயணங்கள் மனதிற்கும், உடலுக்கும் நல்ல புத்துணர்ச்சியைக் கொடுத்ததாகவும், வாரக் கடைசியில் மேற்கொண்ட பயணங்கள்... அடுத்த வாரம் நன்கு பணிபுரிய உதவியதாகவும்'' கூறுவார்.

நல்ல வரலாற்று சிறப்புமிக்க இடங்கள், கலை நுட்பம் வாய்ந்த பகுதிகள், மலைப்பிரதேசங்கள், அரிய சுற்றுலாத் தலங்கள் எங்கு உள்ளது என்று தகவல்கள் சேகரித்து, அந்த இடத்தின் அனைத்து விவரங்களையும் படித்து, அறிந்து கொண்டு, பின்பு நன்றாகத் திட்டமிட்டு, அவர் அந்த இடங்களை காணச் செல்வாராம்.

அவர் தன்னுடைய நண்பர்களையும், பல நல்ல பயணங்களை மேற்கொள்ள அறிவுறுத்துவார். தான் பயணித்த நல்ல அனுபவங்களை தனக்கு தெரிந்த அனைவருக்கும் பகிர்வார். திருமணத்திற்கு முன்பே, பல நாடுகளையும் அதன் ஒவ்வொரு பகுதிகளையும் கண்டதாகச் சொல்வார். ஐரோப்பாவின் அனைத்து நாடுகளுக்கும் சென்றதாகக் கூறுவார்.

தனக்குத் தெரிந்தவர் வேறொரு நல்ல இடத்தைப் பரிந்துரைத்தால், உடனே அடுத்த பயணத்தில் அவ்விடங்களுக்கு சென்று வருவார். ''வார விடுமுறைகள் மற்றும் பொது விடுமுறை நாட்களில் அவர் எக்காரணம் கொண்டும் தன் அலுவலக பணிகளைச் செய்வதில்லை என்றும், விடுமுறை நாட்கள் ஓய்வெடுக்க என்றும், அந்த ஓய்வை அவர் தனக்குப் பிடித்த பயணங்களாக மாற்றி அமைத்ததாக'' சொன்னார்.

பயணங்கள் தனது அறிவைப் பெருக்குவதோடு, பல கலாச்சாரங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் மற்றும் தனது மனதை கட்டுப்பாட்டுடனும், அடக்கத்துடனும் பழக்க உதவியது என்றும் கூறுவார்.

'மூப்பினுக்கு இடங்கொடேல்' (புதிய ஆத்திசூடி: 80)

என்று பாரதியார் சொல்வது போல, என்றும் மனதளவில் இளமையாய் தேடலை நிகழ்த்திக் கொண்டே, அதை நோக்கிய பயணத்தில் தொடர்ந்தபடி இருந்தார் ஜுல்பிகார்.

❖ ❖ ❖

ஜூல்பிகார்

பயன்தூக்கார் செய்த உதவி

உதவுவதில் ஒரு தனித்துவம் கடைபிடித்தார் ஜூல்பிகார். தான் செய்யும் உதவிகள் மூலம், ஒருவர் அவர் தன் இன்னல்களிடமிருந்து விடுபட வேண்டுமென எண்ணினார்.

'செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது' (குறள்: 101)

என்ற வள்ளுவர் வாக்கு, இவரிடத்தில் அகப்பட்டு விட்டன!

உதாரணத்திற்கு, அவரின் பள்ளி நண்பரிடம் பேசியபோது "ஜூல்பிகார் இங்கிலாந்து சென்றதற்குப் பின், என் போன்ற நண்பர்களை அணுகினார். நன்கு படிக்கும் பள்ளிக் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை தர விரும்புவதாகவும், அக்குழந்தைகள் கல்லூரி முடிக்கும் வரை அனைத்து கல்விக் கட்டணங்களையும் தானே ஏற்பதாகவும் கூறினார்".

"நான் ஒரு பள்ளி ஆசிரியர் என்பதால், எங்கள் பள்ளியில் நன்கு படிக்கும் ஏழை மாணவி ஒருவரை தேர்வு செய்து முன்னிறுத்தினேன்... அவர் கல்லூரி படிப்பு முடிக்கும் வரை ஜூல்பிகார்தான் கல்விக் கட்டணங்களை செலுத்தினார். அந்த மாணவி முதல் நிலையில் சிறந்த மாணவியாகப் பயின்றதால், பின்பு முதுகலை படிப்புக்கு அந்தக் கல்லூரியே கல்விக் கட்டணங்களை ஏற்றது. அவர் நன்கு பயின்று, தற்போது வெளிநாட்டில் நல்ல நிலையில் உள்ளார்".

"ஜூல்பிகார் உதவி செய்யாவிடில்... அந்த நன்கு படிக்கும் ஏழை மாணவி என்றோ பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தி, வேலைக்குச் சென்றிருப்பார். இது போன்று யார் என்றே தெரியாத நிலையிலும், அவர் கல்வி என்று வந்து விட்டால் உடனே உதவி புரியும் மனம் கொண்டவர்".

பொருளுதவி செய்வதில் இருவேறு அணுகு முறைகளை அவர் பின்பற்றினார். முதல் முறை, அவரிடம் கேட்கப்படும் பொருளுதவிகளுக்கு எந்த வித நிபந்தனையின்றி முதலுதவி செய்பவர் ஜூல்பிகார். "நான் இப்பொழுது உதவுவதால் அவர்கள் பிரச்சனைகள் தீர்ந்து விடும் என நம்பிக்கையுள்ளதா?" என்று மட்டும் கேட்பார்.

ஜூல்பிகாரின் இரண்டாம் அணுகு முறை சற்றே வித்தியாசமானது. இரண்டாம் முறை அதே நபர் அதே காரணங்களுக்காக உதவி கேட்கும்போது, தான் முன்பு செய்தவைகள் அவருக்கு இன்னல்களிடமிருந்து முழுமையாக விடுபட முடியவில்லை என்றால், அந்தப் பிரச்சினையின் தன்மை வேறு எனவும் அதைப் பற்றி முழுமையாகக் கூறினால்... அதை பகுப்பாய்வு செய்து,

தீர்வு காண வழிமுறைகள் சொல்வதாகவும் கூறுவார். இம்முறை பொருளுதவி செய்வதை தவிர்த்து விடுவார்.

இந்த ஆலோசனைகளை அவர் வழங்கும் முன், தனது நேரங்களை செலவு செய்து பல்வேறு பகுப்பாய்வுகள் செய்த பின்புதான், நண்பர்களுக்கு அறிவுரை வழங்குவார். விரைவாகவும், உகந்த முறைகளிலும் நண்பர்கள் தங்கள் பிரச்சினைகளிலிருந்து விடுபட பல்வேறு தரவுகளை அலசி ஆராய்வார்.

இந்த இரண்டாம் அணுகுமுறை வெறும் பொருளுதவி கொடுப்பதைக் காட்டிலும் சிறந்தது. நமக்கெதற்கு என்று ஒதுங்கி விடாமல், அவரின் மேலான நேரத்தை மற்றவர்களின் துயர் நீங்க செலவு செய்தது உதவியின் உச்சக்கட்ட நிலை.

'எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு' (குறள்: 424)

அரிய கருத்துகளைக் கூட கேட்பவர்க்கு விளங்கும்படி எளியனவாகவும், அவர் மனங் கொள்ளும்படியும் சொல்லி பிறர் சொல்லும் நுட்பமான கருத்துக்களையும் ஆராய்ந்து தெளிவதே அறிவுடைமையாகும். அதை இவர் திறமையாகக் கையாண்டார்.

ஜூல்பிகாரின் நல்லெண்ணத்தைப் புரிந்து கொண்டு, அவரிடம் தங்கள் உண்மையான சிக்கல்களைப் பற்றிக் கூறி... அவர் ஆலோசனைகளைப் பின்பற்றிய நண்பர்கள் தங்கள் சிக்கல்களுக்கு நல்லதொரு தீர்வு கண்டார்கள்.

'பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது' (குறள்: 103)

என்ற குறளுக்கேற்ப ஜூல்பிகார், எவ்வித எதிர் பலனையும் நோக்காமல் செய்த உதவிகள் ஒவ்வொன்றும், கடலைவிடப் பெரியது!

எழுமையும் ஏமாப் புடைத்து

பணியில் மேன்மையடைய ஒரு யுக்தியை பின்பற்றினார் ஜூல்பிகார். கணினியில் அவர் வல்லவர் என்பதால், அதன் அடுத்த கட்டமாக, அவர் சான்றிதழ்கள் (Certifications) பெற தேர்வுகள் எழுத ஆரம்பித்தார். அடிப்படையை நன்கு புரிந்த காரணத்தினால், அவர் தான் முயன்ற அனைத்து சான்றிதழ்கள் தேர்வுகளிலும் வெற்றி பெற்றார்.

இங்கிலாந்து சென்ற பின் பல சமயங்களில், அவர் எந்த நிறுவனத்திலும் ஊழியராக இல்லாமல், தானே ஒரு ஆலோசகராக (Independent Consultant) செயல்பட்டார். தனிப்பட்ட ஆலோசகராக ஒரு நிறுவனத்தில் ஒப்பந்தம் பெறுவது அவ்வளவு எளிதல்ல. ஆனால், ஜூல்பிகார் பெற்ற பல்வேறு சான்றிதழ்கள் அவருக்கு எளிதாக மற்ற ஆலோசகர்களிடமிருந்து முன்னிறுத்தி, நிறுவனங்கள் உடனே அவரை தேர்வு செய்யவும், பல நேரடி ப்ராஜெக்ட்களை செய்யவும் வினையூக்கி போலச் செயல்பட்டன.

'துணி அளவு செல்' (புதிய ஆத்திசூடி: 58)

என்பதை அறிந்தவராதலால் எதையும் கூர்ந்து பார்த்து வாழ கற்றுக் கொண்டார்.

நண்பர்களுக்கு அவர் ஆலோசனைகள் கூறும்போது, "உங்கள் படிக்கும் நேரத்தில் 30% மும், சம்பாதிக்கும் பணத்தில் 10% மும், சான்றிதழ்களைப் பெறுவதற்கு எழுதும் தேர்வுகளுக்குச் செலவிடுங்கள், அவை எளிதில் மற்றவர்களிடமிருந்து உங்களை முன்னிறுத்தி, உங்களுக்கு பல மடங்கு வருவாய் நன்மைகளையும், பதவி உயர்வையும் தேடித்தரும்" எனக் கூறுவார்.

'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து' (குறள்: 398)

என்ற பொய்யில் புலவரின் வாய்மொழிப்படி, நாம் கற்கின்ற கல்வியானது எப்பொழுதும் நமக்கு உதவும் எனச் செயல்பட்டார்.

நாம் நம் வாழ்நாளில், ஒற்றை இலக்கத்தில்தான் சான்றிதழ்கள் பெற்றிருப்போம். ஆனால், ஜூல்பிகாரோ குறைந்தது 50 க்கும் மேற்பட்ட சான்றிதழ்கள் பெற்றிருப்பார். கல்லூரி படிக்கும் காலத்தில், ஒரே நேரத்தில் முழு நேர உயர் கல்வி பயின்று கொண்டே, அக்கல்விக்கு உதவும் பல துணை பட்டப்படிப்புக்களை தொலைதூரக் கல்வி வழியாகப் பயின்றவர். இந்தப் பழக்கம் அவருக்கு, பின்பு பணிபுரியும் காலங்களில் சான்றிதழ்கள் பெறும் பழக்கமாகத் தொடர்ந்தது.

❖ ❖ ❖

ஜூல்பிகார்

தக்காரக்கு வேளாண்மை செய்தல்

ஜுல்பிகாரின் முதன்மை எண்ணம் மற்றும் நோக்கமானது திறமையான மாணவர்களைக் கண்டறிந்து அவர்களை அடுத்த கட்டத்திற்கு முன்னேற்ற வேண்டும் என்பதே. தான் எவ்வாறு ஒரு சாதாரண நிலையிலிருந்து, சாதனையாளராக மாறினாரோ... அவ்வாறு பல திறமையான மாணவர்கள் இருக்கிறார்கள் எனவும், அவர்களுக்கு முறையான வழிகாட்டுதல் இருந்தால்... அவர்கள் தன்னை விட விரைவாக முன்னேற வாய்ப்பு கிட்டும் என அடிக்கடி கூறுவார்.

- முன்னேறத் துடிக்கும், ஆனால் வழிமுறைகளும் வழிகாட்டுதலும் கிடைக்காத சிறந்த திறமைகள் கொண்ட மாணவர்களைக் கண்டு பிடிப்பது.
- அவர்களுக்கு நிறுவனங்கள் கேட்கும் தற்கால தொழில் நுட்பங்களைப் பயிற்றுவித்தல்.
- அவர்களுக்கு முன்பே அந்தத் தொழில்நுட்ப அறிவு இருந்தால் அவைகளில் இன்னும் கூடுதல் நிபுணத்துவம் பெறவைப்பது.
- எவ்வாறு நேர்காணலை பயமின்றி எதிர்நோக்குவது, அதற்கு என்ன சிறந்த வழிகள் என பயிற்சியளிப்பது.
- ஒரு மாணவனின் குறைகளை நிவர்த்தி செய்து, அவரின் நிறைகளை மேலும் மெருகேற்றுவது.
- வேலைவாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வேலை பெற உதவுவது.,

என அவர்களை ஆற்றுப்படுத்த ஆசைப்பட்டார்...

இவைகள் அனைத்தும் ஜுல்பிகார், தான் MCA பயின்றபோது சக மாணவர்கள், நண்பர்கள், தன்னை அணுகியவர்களுக்கு செய்தவைகளே! மாணவனாக தான் இருந்தபோது செய்த அறிவுப் பகிர்தலை, அவர் அடுத்த கட்ட முன்னேறிய சிந்தனையாக எண்ணினார்.

தன் எண்ணங்களை, செயல் வடிவமாக மாற்ற அவர் முயற்சி மேற்கொண்டார். அதன் தொடக்கமாக, அவர் தனது கல்லூரியில் தற்போது பயிலும் மாணவர்களுக்கு ஒரு ஆலோசனை வலைப்பதிவு அனுப்பினார்.

அதன் சாராம்சம்:

அதிகபட்ச மாணவர்கள் பின்பற்றும் அணுகுமுறை

- படிப்பு
- சுயவிவரங்கள் கொண்ட சில பக்கக் குறிப்புகள் (Bio -Data)
- வேலை தேடல்
- பின்பு வேலை கிடைக்கவில்லையெனில்
- மீண்டும் பயிற்சி வகுப்புகள் / இலவசமாக வேலை செய்வது
- பின்பு மீண்டும் வேலை தேடல்...

ஆனால், ஜூல்பிகாரோ இந்தப் பொதுவான அணுகுமுறையிலிருந்து வேறுபட்டிருந்தார்.

- படிப்பு
- படிக்கும் காலங்களிலேயே தனது சுயவிவரங்கள் கொண்ட சில பக்கக்குறிப்புகள் (Bio -Data) தயாரிப்பு
- படிக்கும் காலங்களிலேயே பகுதி நேர வேலை
- படிக்கும் போதே, எங்கெங்கு வேலை செய்யும் வாய்ப்புகள் கிடைத்ததோ, அங்கு சம்பளம் எதிர் பாராமல் பணிபுரிந்தார்
- பின்பு நல்ல வேலை தானாக அவரைத்தேடி வந்தது...

அவரின் நோக்கம் அனைத்தும் திறமைகளை வளர்க்கும் முனைப்பிலேயே இருந்தது. இவரின் இந்த மாறுபட்ட அணுகுமுறையின் பயனாக, படித்து முடிக்கும் முன்னரே அவருக்கு மிகப்பெரிய நிறுவனத்தில் செய்முறை வடிவமைப்பு (ப்ராஜெக்ட்) செய்யவும் மற்றும் நிரந்தர வேலையும் எளிதாகக் கிடைத்தது.

இளைமைக்கால பகுதிநேர வேலை அனுபவங்களே, பிற்காலங்களில் பணி புரிந்த அனைத்து பன்னாட்டு நிறுவனங்களிலும் அவர் உயர் பதவியை அடைவதற்கு எளிதாக உதவியது.

ஜுல்பிகாரின் எண்ணங்கள் மற்றும் மாணவர்களுக்கான ஆலோசனைகளை செயல்வடிவமாக மாற்ற அவரின் இளைய சகோதரர் சில மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை அடுத்த கட்டத்திற்கு முன்னேற்றியுள்ளார். நண்பர்களும் அவரின் எண்ணங்களை செயல்படுத்த முயற்சி மேற்கொண்டு உள்ளனர்.

‘தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு’ (குறள்: 212)

என்ற தெய்வப்புலவரின் மொழிக்கேற்ப, தன்னால் இயன்ற அளவு... தேவைப்படுவோருக்கு தக்க சமயத்தில் உதவிகள் செய்து, உலகத்தில் உய்ய வழி காட்டியவர்.

‘நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்’ (குறள்: 28)

நிரம்பிய கல்வியுடைய மாந்தரது பெருமையை அவராற் சொல்லப்பட்ட சொற்களே அடையாளம் காட்டிவிடும்.

'My recommendation for career buiding is to follow bottom-up approach, it worked for me (20 years ago) and is still effective. Usually most students (99%) follow the top-down approach (i.e graduation, cv, search for jobs, no jobs then go for training/work for free etc.,) but I took the opposite approach during college - bottom-up'.

- *A brief message which was posted by Syed Zulfiqar in JMC UK Alumni Group.*

கொள்கையில் குன்றாக் குடிப்பிறப்பாளர்

ஜூல்பிகாரின் உதவும் தன்மைகளைப் பற்றி எண்ணி வியக்கும் நண்பர்கள், அவரிடம் மட்டுமே பழகியவர்களாக இருப்பார்கள். ஜூல்பிகாரின் பெற்றோர்களை நன்கு அறிந்தவர்கள் இவ்வாறு வியக்க மாட்டார்கள். ஏனெனில், இவரின் உதவும் தன்மை வழி வழியாக வந்த குடும்பத்தினரின் குணங்கள்.

'நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு' (குறள்: 953)

நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு முகமலர்ச்சி, இருப்பதைக் கொடுத்தல், இனிமையாகப் பேசுதல், பிறரை இகழ்ந்து கூறாமை ஆகிய நான்கும் நல்ல பண்புகள் என்பர். இக்கூற்றுக்கு தக்க உதாரணம் ஜூல்பிகாரின் குடும்பத்தினர்.

அவரின் பெற்றோர் அனைவருக்கும் நன்கு உதவும் குணமுள்ளவர்கள். ஜூல்பிகார் பல உதவிகளை தன் பெற்றோர் மூலமாகவே செய்ததாகக் கூறுகிறார்கள். யாரவது, ஜூல்பிகாரிடம் அவசர உதவி கேட்கும்போது, அவர் வெளிநாட்டில் வசித்த காரணத்தால், உடனே தன் வீட்டிற்குச் சென்று, தன் பெற்றோரை அணுகுமாறு அறிவுறுத்துவார்.

'நாட்டார்க்கு நல்ல செயலினி....'

(இனியவை நாற்பது–பாடல்: 17)

அவ்வாறு அணுகியவர்களை, 'ஏன்? எதற்கு இந்த உதவி' என்று ஒரு கேள்வியும் கேட்காமல், உடனே அவரின் பெற்றோர்கள் உதவியதாக நண்பர்கள் கூறினர். அவர்களும், செய்தவைகளை எத்தருணத்திலும் மற்றவர்களிடம் கூறமாட்டார்கள். எப்பொழுதும் போல இயல்பாகப் பேசுவார்கள்.

ஜூல்பிகாரின் பெற்றோர், அவரது நண்பர்களையும் தங்கள் பிள்ளைகள் போன்றே கருதி அன்பு செலுத்தினர். அவர்கள் முன்பு பொருளாதாரத்தில் சாதாரண நிலையில் இருந்தபோதும் சரி, பின்பு நல்ல நிலையில் இருந்தபோதும் சரி; அவர்களின் குணங்கள், பழக்க வழக்கங்களில் எந்த மாற்றமும் இல்லை. எப்பொழுதும் அவர்கள் ஒரே மனோபாவத்துடன் இருந்தார்கள். நண்பர்கள் ஜூல்பிகாரை காணச் செல்லும்போது, அவரின் பெற்றோரும் நண்பர்கள் போலவே பேசுவார்கள், நன்கு உபசரிப்பார்கள். நண்பர்கள் ஜூல்பிகாரின் வீட்டிற்குச் சென்றால், தன் வீட்டில் இருப்பதைப் போல் உணர்வார்கள். அந்த அளவிற்கு ஜூல்பிகாரின் வீட்டில் சுதந்திரம் இருக்கும்.

ஜுல்பிகார் அவர்கள், பிற்பகுதியில் வசித்த ஜெனரல் பஜார் தெரு (தென்னூர், திருச்சி).

"பள்ளி மற்றும் கல்லூரிக் காலங்களில், நாங்கள் கிரிக்கெட் போட்டிகளுக்குச் செல்வோம். ஜூல்பிகாரின் வீட்டிற்குச் சென்று அவரை அழைக்கும்போது, அவர் படித்துக் கொண்டிருப்பார், ஆனால் விளையாடத் தயாரான நிலையில் இருப்பார். அவரின் வீடு அப்பொழுது சிறியது என்பதால், மிதிவண்டியை பின்புற வாசல் வழியாக அவரது குடும்பத்தினர் எடுக்க உதவுவர். மிதிவண்டி நல்ல முறையில் ஓடுகிறதா என உறுதி செய்வார்கள். கிரிக்கெட் உபகரணங்களை எடுத்துக் கொடுப்பார்கள். அவர் எங்களுடன் கிளம்பும்போது, அவரின் குடும்பத்தினர் அனைவரும் வாசல்வரை வந்து வழியனுப்புவார்கள். இந்நிகழ்வை காணும் எங்களுக்கு, ஒரு நெகிழ்ச்சியைத் தரும். எங்கள் வீட்டில் நாங்கள் பொய் சொல்லியோ அல்லது திட்டுக்கள் வாங்கித்தான் விளையாட வருவோம். ஆனால், ஜூல்பிகாரின் வீட்டிலோ, மொத்தக் குடும்பமும் அவரை ஊக்குவிக்கின்றார்கள்". அதுவே, அவர் வெற்றியை எளிதில் ஈட்ட பெருந் துணையாக அமைந்தது.

ஜூல்பிகாரின் இளைய சகோதரரும் அவ்வாறே. அறிவைப் பகிர்தலிலும், தன்னிடம் உள்ள பொருட்களைப் பகிர்வதலிலும் அவரும் ஜூல்பிகாரைப் போன்றே குணமுடையவர். அவரின் இளைய சகோதரரைப் பற்றி அவருடன் பெங்களூருவில் தங்கியிருந்த நண்பர்கள் கூறும்போது, "அவரும் தன்னுடைய உடைகள், இரு சக்கர வாகனம் மற்றும் அவருடைய பொருட்களை உடன் தங்கியிருந்தவர்கள் யார் கேட்டாலும், உடனடியாக ஏன்?, எதற்கு? என்று கேட்காமல் கொடுத்து விடுவார்" என வியந்தனர்.

நற்குணங்கள் கொண்ட குடும்ப உறுப்பினர்களின் தொடர்சியாக, ஜூல்பிகாரின் மனைவியும் அவரைப் போன்றே உதவும் எண்ணமுள்ளவராக இருந்தார். ஜூல்பிகாரின் உதவும் செயல் திருமணத்திற்குப் பின்பும் மாற்றமடையாததே அதற்குச் சான்று.

'உடையான் வழக்கினி தொப்ப முடிந்தால்
மனைவாழ்க்கை முன் இனிது...'

(இனியவை நாற்பது–பாடல்: 02)

பொருள் உடையவனது ஈகை இனிது. மனைவியுள்ளமும் கணவன் உள்ளமும் ஒன்றுபடக் கூடுமாயின் மனை வாழ்க்கை இனிது. இங்கிலாந்தில் அவர் வாழ்ந்த இடத்தில் வசித்த நண்பர்களும் இதைத்தான் கூறினார்கள். ஜூல்பிகாரும், அவர் மனைவியும் ஒரே கருத்தைக் கொண்டவர்களாகவும்; பிறருக்கு உதவுவதை இணைந்தே செய்ததாகச் சொன்னார்கள். நண்பர்களின் குடும்பத்தை தங்கள் குடும்ப உறுப்பினர்களைப் போன்றே கருதியதாக மகிழ்ந்தார்கள்.

‘மனைக்கக மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை’ (குறள்: 51)

உயரிய நற்பண்புகளுடன், கணவனின் வாழ்வுக்குப் பெருந்துணையாக இருந்தார்.

‘எள்துணை யானும் இரவாது தான்ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது’

(இனியவை நாற்பது–பாடல்: 16)

எள்ளளவாவது, தான் பிறரிடம் யாசிக்காமல், தான் பிறருக்கு தானம் கொடுத்து தர்மம் செய்வது எல்லா விதத்திலும் மிக இனியது என்ற கருத்தை பிரதிபலித்தார்கள்.

‘கொள்’ எனக் கொடுத்தல் உயர்ந்தன்று’ (புறநானூறு: 204)

என்று சொல்வது பொய்யாகுமா என்ன? அஃது உண்மையென, தன் வாழ்வின் மூலம் சூளுரைத்தார் ஜுல்பிகார் அவர்கள்.

‘குடிப்பிறப்பாளர் தம் கொள்கையிற் குன்றார்’

(நாலடியார்–குடிபிறப்பு: 1)

உயர்குடி பிறந்தோராயின், இயல்பாகவே நல்லொழுக்கத்தினின்றும் வழுவார். ஒருவரின் புகழ் ஒழுக்கமானது அவரது நற்குடும்ப பழக்கத்திலிருந்து வருவதாகும்.

❖ ❖ ❖

மொய்ம்புறத் தவஞ் செய்

'ஊக்கமது கைவிடேல்' (ஆத்திசூடி: 6) என்ற பதத்தைத் தெளிந்த வராததால், எப்போதும் உற்சாகம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி, கடின உழைப்பு ஆகியவற்றை பின்பற்றும் கோட்பாட்டுக்கு உதாரணாமாகத் திகழ்ந்தார்.

'வியர்வைத் துளியும், கண்ணீர் துளியும் உப்பாக இருக்கலாம்...
ஆனால் அவைதான் வாழ்வை இனிப்பாக மாற்றும்'

என்ற சிந்தனையில் திளைத்தவர்.

ஒவ்வொருவரும் தங்கள் இலக்குகளை எவ்வாறு கவனம் செலுத்தி, எப்படி அடைய வேண்டும்... என்பதை தன்னை சார்ந்தவர்களுக்கு எளிய முறையில் கற்றுக் கொடுத்தவர். அவர் மேலான அறிவுரைகள் வழங்குவதோடு நிற்காமல், அவற்றை எவ்வாறு எளிதாக அடைவது என்பதற்கான வழிகளையும் சொன்னவர்.

'யவனர் போல் முயற்சி கொள்' (புதிய ஆத்திசூடி: 86)

அதாவது, ஊக்கத்துடன் முயற்சி செய் என அறிவுறுத்தியதோடு தானும் அவ்வாறே நடந்து காட்டினார்.

ஜூல்பிகார் இருக்கும்போது, அந்த இடமே தன்னம்பிக்கையின் சிகரமாக இருக்கும். அவர் அனைத்து விதத்திலும் நல்ல நிலையிலிருந்த போதிலும், அதை ஒருபோதும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் எளிமையாகவும், இயல்பாகவும் இருந்தார். அவரின் குணாதிசயங்கள் மற்றவர்களுக்கு நல்லதொரு உத்வேகத்தை தந்தது. அவர்களின் மனதில், ஜூல்பிகாரை உயரத்தில் நிறுத்தியது.

'எண்ணிய எண்ணியாங்கு எய்து எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்' (குறள்: 666)

எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள். இக்குறள் ஜூல்பிகாரை நினைவுபடுத்தும்.

'மொய்ம்புறத் தவஞ் செய்' (புதிய ஆத்திசூடி: 83)

மன வலிமை மிக்கவராக இருந்ததோடு மட்டுமல்லாமல் அதை அதிகரிக்க நித்தம் பயிற்சியும், முயற்சியும் பழகினார்.

'தன்னம்பிக்கை என்பது தனிநபர் இராணுவம்'

என்ற சொல்லடை, இவரது முடிவுகளுக்குப் பொருத்தமாக இருந்தது.

❖ ❖ ❖

ஜுல்பிகார்

நிறைகுடம் நீர் தளும்பல் இல்

'கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்'

(கொன்றை வேந்தன்: 19)

பலவானாக இருந்தாலும் கர்வப் பேச்சு கூடாது என்பதை உணர்ந்தவர் ஜூல்பிகார்.

உலகப் புகழ்பெற்ற தினசரி நாளிதழில் மூத்த ஆசிரியராகப் பணியாற்றி வரும் நண்பர் ஒருவர் ஜூல்பிகாரைப் பற்றி நினைவு கூறும்போது, "பத்திரிக்கைத் துறையில் சாதிக்க வேண்டுமென ஆர்வம் கொண்ட நான், எனது மத்திய அரசுப் பணியை விட்டுவிட்டு, பத்திரிக்கை துறை சார்ந்த படிப்பில் உயர் கல்வி படித்துக் கொண்டிருந்த சமயம் அது. அந்த காலக்கட்டத்தில் ஜூல்பிகார் இங்கிலாந்தில் பணிபுரிந்து கொண்டிருந்தார். வருடம் ஒரு முறை தமிழகத்துக்கு வரும் அவரை, சென்னையில் நண்பர்கள் சந்திக்கும்போது நானும் உடன் இருந்தேன். ஏன்? இத்தனை நண்பர்கள் ஒரு தனி மனிதனை சந்திக்கிறார்கள் என ஒரு வினா என் மனதில்.

நான் ஜூல்பிகாருடன் உரையாடும்போது, இவர் கணினி மற்றும் மென்பொருள் தொழில் நுட்பத்தில் தானே அறிவாளி, பத்திரிக்கைத்துறையில் என்ன தெரியப் போகிறது என கர்வம் கொண்டு பேச, அவரோ ஒவ்வொரு விடயமாக என்னிடம் கேட்கக் கேட்கத்தான் தெரிந்தது இவர் அனைத்து துறைகளிலும் வல்லவரென்று. ஆனால், அவரின் அணுகுமுறையில் ஒரு முதிர்ச்சி இருந்தது. அதாவது எந்த ஒரு விஷயத்தையும் தனக்குத்தான் தெரியும் என்று எண்ணாமல், அவர் கேட்கும் விவரங்கள் ஒரு கற்றுக்கொள்ள ஆர்வமுள்ள மாணவனைப் போன்று தன்னை வெளிப்படுத்தினார்" என வியந்தபடி சொன்னார்.

என் உரையாடலின்போது, "நான் இங்கு சில அரிய புத்தகங்கள் கிடைக்கவில்லை எனவும், அதன் பெயர்களையும் குறிப்பிட்டிருந்தேன். அடுத்த ஆண்டு இங்கிலாந்திலிருந்து தமிழகம் வந்த ஜூல்பிகார், என்னைத் தொடர்பு கொண்டதோடு மட்டுமல்லாமல், நான் கூறிய அந்த அரிய வகை புத்தகத்தையும் கொடுத்தார். அவர் எனக்காகச் சிரமம் கொண்டு, அந்தப் புத்தகத்தைத் தேடிக் கண்டுபிடித்து வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற எந்த அவசியமுமில்லை.

ஏனெனில், நான் அவரின் நேரடி நண்பரில்லை. இருந்தாலும், புத்தக வாசிப்பில் அவருக்கு இருந்த நாட்டமும், நண்பர்களிடம் அவருக்கு இருந்த கனிவும் எனக்கு ஒரு விஷயத்தைத் தெளிவாக்கியது, ஏன் இத்தனை

நண்பர்கள் இவரைப் பல நூறு கிலோ மீட்டர்கள் பயணப்பட்டு வரவேற்கவும், சந்திக்கவும், வழியனுப்பவும் வருகிறார்களென்று'' எனப் புன்னகை உதித்தார்.

'கற்று அறிந்தார் கண்ட அடக்கம்; அறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்து உரைப்பர்தெற்ற
அறை கல் அருவி அணி மலை நாட!
நிறை குடம் நீர் தளும்பல் இல்'

(பழமொழி நானூறு–பாடல்: 9)

என்ற பழமொழிதனைப் பயிற்றுவித்தார்.

ஒற்றுமை வலிமையாம்

'தொட்டில் பழக்கம் கடைசி வரை' என்பார்கள். அப்படி உதவும் குணத்துடன் ஒட்டிப் பிறந்த ஜுல்பிகார், அதனை நாடு கடந்தும் கடைபிடித்தார்.

வெளிநாட்டில் வாழும்போது... பலர் நமக்கெதற்கு சிரமம், நாமே இங்கு வாழ வந்தவர்கள் என்ற மனோபாவத்தில் 'தான் உண்டு, தமது வேலையுண்டு' என இருப்பார்கள். சிலர் தமக்கு, மிக நெருங்கியவர்களுக்கு மட்டும் தேவைப்படும் உதவிகளையும், வழிகாட்டுதலையும் செய்வார்கள்.

ஆனால், ஜுல்பிகார் இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தார். தன்னை அணுகிய அனைவருக்கும் தன்னால் இயன்ற உதவிகளையும், தேவையான வழிகாட்டுதலையும் எந்தவிதமான தயக்கமுமின்றி செய்தவர்.

தான் திருச்சியில், சென்னையில், மும்பையில் இருந்த போது எவ்வாறு நண்பர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் உதவிகள் செய்தாரோ... அவ்வாரே இங்கிலாந்து நாட்டில் வாழ்ந்த போதும் இந்தியாவிலிருந்து புதிதாக வந்த நண்பர்கள், உற்றார் உறவினர்கள், தன்னுடன் பணிபுரியும் மற்றும் முன்னர் பணிபுரிந்த சக ஊழியர்கள் என யாவருக்கும் தன்னால் முடிந்த உதவிகள், வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுரைகளை வழங்கினார்.

நாட்டிங்ஹாம் (Nottingham, UK) மற்றும் ரீடிங் நகரத்தில் (Reading, UK) அவருடன் பணிபுரிந்த சக ஊழியர்கள் மற்றும் நண்பர்கள் நினைவு கூறும் போது, "ஜுல்பிகாருக்கு அனைத்து விஷயங்களிலும் ஆழமான அறிவு இருந்தது. அவர் தன் பொது அறிவை எப்பொழுதும் புதுப்பித்துக் கொண்டே இருப்பார். தினமும் உள்ளூர் பத்திரிகைகள் மற்றும் செய்திகளை தெரிந்துக்கொள்வதில் அதிக நேரம் செலவிடுவார்".

'ஒப்புரவு ஒழுகு' (ஆத்திசூடி: 10) என்பதை புரிந்தவராததால், உலகத்தின் போக்குக்கு ஒத்த விவேகத்துடனான வாழ்வினை பின்பற்றினார்.

"தனக்குத் தெரிந்த பயனுள்ள தகவல்கள் மற்றும் தான் முயன்று வெற்றி கண்ட நல்ல விஷயங்களை அனைவருக்கும் பகிர்வார். வீடு, வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்கள், அரசு சம்பந்தப்பட்ட திட்டங்கள், ஆவணங்கள், மொபைல் / ப்ராட்பேண்ட் திட்டங்கள் மற்றும் பலவற்றிற்கான ஒப்பந்தங்கள் குறித்த தகவல்களை நுனி விரலில் வைத்திருப்பார்" என வியப்புக் கொண்டனர்.

'சிறந்தமைந்த கேள்விய ராயினும் ஆராய்ந்து
அறிந்துரைத்தல் ஆற்ற இனிது'

(இனியவை நாற்பது–பாடல்: 31)

மிகச் சிறந்த நுட்பமான அறிவுடையவர்களாக இருந்தாலும் ஒரு பொருளை

ஜூல்பிகார்

ஆராய்ந்து உரைப்பது இனிதாகும் என நன்கு உணர்ந்திருந்தார்.

பல நண்பர்களுக்கு சொந்த வீடு வாங்கும் எண்ணத்தை விதைத்தது ஜுல்பிகார் தான். நண்பர்களைத் தன் சொந்த குடும்பம் போல் பாவித்து, அவர்களுக்கு ஏன் நீங்கள் சொந்த வீடு வாங்க வேண்டும், அதனால் கிடைக்கும் பயன்கள் என்ன? சேமிப்பு என்ன?, அதன் எதிர்கால திட்டம் பற்றியெல்லாம் மிக விரிவான பகுப்பாய்வு மேற்கொண்டு அதை நண்பர்களுக்கு விளக்குவார்.

நண்பர்கள் அவரிடம் ஆலோசனை கேட்கும்போது, தனக்கு ஒரு பொருள் வாங்கினால் எவ்வளவு அக்கறை காண்பிப்போமோ; விவரங்களைச் சேகரிப்போமோ; அவ்வாறே எண்ணி அவர்களுக்கு வழிகாட்டுவார். அந்த வீடு / பொருளின் சாதக பாதகங்களை ஆராய்ந்து, நல்ல வழிகாட்டுதலை வழங்குவார். தானே முன்னின்று, அவர்களுக்கு அந்த வீடு / பொருளின் காப்பீடு மற்றும் இதர சட்ட இணக்கம் பெற, தனக்குத் தெரிந்த நல்ல நிறுவனங்களுக்கு அழைத்துச் சென்று, அந்தப் பணி நிறைவு பெறும் வரை துணை நிற்பார். "தானாக முன்வந்து உதவும் எண்ணம் கொண்டவர் என்பதும் திண்ணம்" என்றார்.

"நாடு விட்டு நாடு வந்து வாழ வந்திருக்கும் அவர்களுடைய பயத்தைப் போக்கி, அவர்களின் முக்கிய தேவைகள் பூர்த்தியடைந்ததா எனச் சரிபார்ப்பு பட்டியல் ஒன்றை தயார் செய்து ஒவ்வொன்றாகச் சரி பார்ப்பார். அவரின் அறிவுரைகளால், ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்சம் சில பவுண்டுகளை சேமிக்க உதவியது" என உள்ளன்போடு வெளிக்காட்டினர்.

அவரின் தன்னலமற்ற, உதவும் தன்மைகளைக் கண்டு வியந்தவர்கள் பலரும்; அவரையும், அவர் குடும்பத்தினரையும் தங்கள் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் போலவே எண்ணினார்கள். தனது ஒப்பற்ற குணங்களால், அனைவரின் வாழ்க்கையிலும் ஆழமான ஆக்கபூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தினார். அதோடு அவர்களின் உள்ளத்தில் நீங்காது இடம் பிடித்தார்!

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' (குறள்: 322)

என்ற கருத்தியலுக்கு ஏற்ப தனக்குத் தெரிந்த அனைத்தையும் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளும் சுபாவத்தைக் கொண்டிருந்தார்.

❖ ❖ ❖

ஜூல்பிகார் – இங்கிலாந்து நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர் – மாணவன் அனாஸ்

மழலை மாறா மற்றொரு குழந்தை

"இறைவன் எங்கே இருக்கிறார்?" என்ற வினாவிற்கு,

'வெள்ளை உள்ளமது
பிள்ளைச் சிரிப்பே
இறையின் இல்லம்'

என்று சான்றோர்கள் சுட்டிக்காட்டிய இறைநிலையின் இல்லத்தை, நட்பு பாராட்டியவர் ஜூல்பிகார். குழந்தைகளிடம் மிகுந்த பாசமாக இருப்பார். அவர்களுக்குப் பரிசுகள் கொடுப்பது மட்டுமல்லாமல், அவர்களிடம் அறிவுப் பூர்வமாகப் பேசவும், விவாதிக்கவும் செய்வார்.

அடுத்த முறை, அக்குழந்தைகளை சந்திக்கும்போது... இன்னும் அந்த விவாதத்தின் தகவல்களைக் கூர்மையாகச் சேகரித்து, அக்குழந்தைகளின் ஆர்வத்திற்கேற்ப விவாதத்தைச் செம்மைப் படுத்துவார்.

அப்படியொரு நிகழ்வுதான் ஜூல்பிகாருடன் MCA ஒன்றாகப் படித்த நண்பரும், அவருடன் ரீடிங் (Reading, UK) நகரில் அருகில் வசித்த நண்பர் ஒருவர் கூறியது...

"என் மகன் அனாஸும் ஜூல்பிகாரும் பல நல்ல கருத்துக்களை அறிவியல் ரீதியாகவும் ஆக்கபூர்வமாகவும் பகிர்ந்து கொள்வார்கள். 'அனாஸ்' எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போதே அரசியலிலும் ஆர்வம் கொண்டிருந்தான். நாம் சிறுவர்களுக்கு அரசியல் ஈடுபாடு தேவையற்றது என்று படிப்பு மற்றும் விளையாட்டில் மட்டுமே அவர்களை ஊக்குவிப்போம். ஆனால், ஜூல்பிகாரோ என் மகன் அனாஸின் அரசியல் ஆர்வத்தைப் பாராட்டி, தனக்குத் தெரிந்த அரசியல் தகவல்களை அவனுடன் பகிர்ந்து கொண்டார்".

"அவர் அனாஸின் அரசியல் அறிவைக் கூர்மைப் படுத்தியதோடு நாங்கள் வசித்த பகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் கவுன்சிலர்களிடம் அவனை அறிமுகப்படுத்தி அனாஸின் அரசியல் ஆர்வத்தைப் பற்றி அவர்களிடம் கூறியுள்ளார். அனாசிடம் உரையாடிய அரசியல்வாதிகள் மாணவனின் அரசியல் அறிவினைப் பாராட்டியதாகவும், அச்சிறுவன் கேட்ட அரசியல் கேள்விகளைக் கண்டு வியந்ததாகவும், இவை அனைத்திற்கும் காரணம் ஜூல்பிகார்தான்" என்று நண்பர் உணர்ச்சி ததும்பக் கூறி உள்ளம் நெகிழ்ந்தார்.

அவரின் மற்ற இங்கிலாந்து நண்பர்கள் "எங்களின் குழந்தைகளுடன் அவர் ஒரு குழந்தையாகவே மாறி விளையாடுவார்., நண்பர்களைப் போலவே பழகுவதால் குழந்தைகளும் ஜூல்பிகாரை ஒரு நண்பர் போலவே கருதுவார்கள்.

ஜூல்பிகாரும் குழந்தைகளும்

எப்பொழுது வீட்டிற்கு வந்தாலும் எங்களின் குழந்தைகளுக்கு அவர் விளையாட்டுப் பொருட்களும், கதைப் புத்தகங்களும் வாங்கிக் கொடுப்பார். குழந்தைகளுக்கு என்ன விளையாட்டு பிடிக்குமோ... அதையே அவர்களுடன் விளையாடுவார். அடுத்த முறை வரும்போது அந்த விளையாட்டின் நுணுக்கங்களைக் கற்று இன்னும் சிறப்பாக குழந்தைகளுடன் விளையாடுவார்'' என நினைவுகளைப் பகிர்ந்து ஆனந்தம் கொண்டனர்.

'யாரொருவர் தர்கம் பாராது, தற்பெருமை பேணாது
தெரியாத ஒன்றை, சிறியவனிடமாயினும்
பெற எண்ணுகிறானோ
அவன் நிறைய கற்றுக்கொள்கிறான்' (ஓசோ)

''என் மகனுக்கு கால்பந்து விளையாட்டு பிடிக்கும் எனத் தெரிந்து, ஒரு கால்பந்தை வாங்கி வந்த அவர், அதற்கு அடுத்த முறை அதன் அனைத்து விதிமுறைகளையும் நன்கு கற்றுக் கொண்டு பிறகு என் மகனுக்குக் கற்றுக் கொடுத்து அவனுடன் விளையாடினார்'' என நெகிழ்ச்சியுடன் இயம்பினார். அனைத்துக் குழந்தைகளையும் நண்பர்களாகப் பாவித்து, குழந்தைகளின் நண்பனாக விளங்கினார், அந்த மழலை மாறா மற்றொரு குழந்தை!

ஜுல்பிகார்

பன்மொழி வித்தகர்

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் புலமை கொண்டவர் ஜுல்பிகார். அவர், இலக்கணப் பிழையின்றி எழுதும் திறன் கொண்டவர். அதே சமயத்தில், பிற மொழிப் புலமைகளும் அவருக்கு மிக எளிதாக வந்தது. தூய உருது மொழி பேசும் திறன் கொண்ட அவர், இந்தி மொழியையும் சிறப்பாக பயின்றார்.

பாரதியார் சொன்ன *'நூலினை பகுத்துணர்'* (புதிய ஆத்திசூடி: 59) மற்றும் *'(உ)லோகநூல் கற்றுணர்'* (புதிய ஆத்திசூடி: 101) அறிவுரைகளின்படி, படிக்கும் நூல்களை ஆராய்ந்து மற்றும் அறிந்து கொண்டது மட்டுமல்லாமல் பிற மொழிகளில் உள்ள நல்ல நூல்களையும் படித்தார்.

நண்பர் ஒருவர் கூறும்போது ''பிற மொழிப் படங்களைப் பார்க்கும் மற்றும் இசைகளைக் கேட்கும் பழக்கமுள்ள நான், அதன் அர்த்தங்களை ஜுல்பிகாரிடம் கேட்கும்போது மிக எளிதாக விளக்குவார். அவரின், பன்முக மொழியறிவு நம்மையும் ஊக்குவிக்கும். பலமொழிப் பாடல்களையும் கேட்கும் அவர் அதன் இசை நுணுக்கங்களையும் அலசி ஆராய்வார். அதன் இசைப் பாடல்கள் கேசட்டுகளை நமக்குக் கொடுத்து நமது ஆர்வத்தை மேலும் அதிகப் படுத்துவார்''.

மற்றொரு நண்பர் நினைவு கூறும் போது ''எப்பொழுதெல்லாம் ஜுல்பிகார் எங்கள் வீட்டிற்கு வருகிறாரோ அப்பொழுதெல்லாம் எனது தந்தையும் ஜுல்பிகாரும் பழைய கால பாடல்கள் பற்றியும் இசை பற்றியும் ஆலோசிப்பார்கள். தந்தை கூறும் பழைய கால பாடல்கள் கொண்ட இசைக் கேசட்டுகளை சிரமம் பாராமல் பல கடைகளில் விசாரித்து கண்டுபிடித்து வாங்கிக் கொடுப்பார். அவரே, சில அரிய நல்ல பாடல்களைத் தன்னிடம் உள்ள டேப் ரெக்கார்டர் மூலம் பதிவு செய்து கொடுப்பார்''.

'பாட்டினில் அன்புசெய்' (புதிய ஆத்திசூடி: 66), இசையே உலக மொழியாம், பாடல்களினால் அன்பு செய் என்பதை அறியாதவரல்லர்.

நண்பர் ஒருவர் தன் நினைவுகளைப் பகிர்ந்தபோது, ''ஜுல்பிகார் தன் சக வகுப்பு நண்பர்களுக்கு மட்டுமின்றி, மற்ற வகுப்பு நண்பர்களுக்கும் தேவைப்படும் நேரத்தில் உதவிக்கரம் நீட்டுவார். நான் முதுகலை இயற்பியல் முதலாம் ஆண்டு படிக்கும்போது, அனைத்து இயற்பியல் துறை வகுப்புகளும் சேர்ந்து பல்கலைக்கழக அளவில் இயற்பியல் சார்ந்த அறிவு, தொழில்நுட்பம், சமூக மற்றும் கலாச்சார விழா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். நான் விழாவிற்கு ஆதரவாளர்கள் / உதவியாளர்கள் (Program Sponsors) திரட்டும்

குழுவில் இருந்தேன். எனக்கு அனுபவமும் இல்லை, திறனும் இல்லை. ஆதலால், என்னால் ஒரு ஆதரவாளர் (Sponsor) கூட திரட்ட முடியவில்லை. விழாவிற்கு ஒரு வாரமே உள்ளது எனும் கடைசி கட்டத்தில் ஜூல்பிகாரை அணுகி, என் நிலையை எடுத்துரைத்து வழி காட்டச் சொன்னேன்.

உடனே அனைத்து விவரங்களையும் என்னிடம் பெற்றுக் கொண்டு விரைவான திட்டம் தீட்டி, காலையில் கல்லூரியில் வகுப்புகள் தொடங்குவதற்கு 2 மணி நேரத்திற்கு முன்பும், பின் கல்லூரி வகுப்புகள் முடிந்து மாலையில் 3 மணி நேரம் எனப் பல நிறுவனங்களுக்கு என்னை அழைத்துச் சென்று அவர்களிடம் பேசி, ஐந்தே நாட்களில் விழாவிற்கு பல ஆதரவாளர்கள் (Program Sponsors) பெற்றுக் கொடுத்தார். நிறுவனத்தில் மிகப்பெரிய பதவியில் இருப்பவர்களை சந்திக்கும்போது, அவர் தன் மொழித்திறனை வெளிப்படுத்தினார். நிர்வாக இயக்குனர்களின் மனநிலை அறிந்து அவர்களுக்கு ஏற்ற மொழிகளில் தமிழ், ஆங்கிலம், இந்தி, உருது மொழிகளில் மிகச் சரளமாக உரையாடினார். அவரின் உறுதியான பேச்சுத்திறன் மூலம் நிர்வாக இயக்குனர்கள் கவரப்பட்டு, விழாவிற்கு ஆதரவளித்தனர். விழா வெற்றியுடன் நிறைவடைந்த பிறகு பேராசிரியர் ஒருவர், நான் தான் அதிக ஆதரவாளர்கள் (Program Sponsors) பெற்றுக் கொடுத்ததாக என்னை பாராட்டினார்கள். ஆனால், அப்பெருமை அனைத்தும் ஜூல்பிகாரின் பன்மொழி மற்றும் பேச்சுத் திறமையினால்தான்.

ஜூல்பிகாருடன் பல நிறுவனங்களுக்கு அவருடன் சென்ற எனக்குக் கொடுத்த ஆக்கப்பூர்வமான அனுபவங்கள், பிற்காலத்தில் நான் பணிபுரிந்த அனைத்து நிறுவனங்களிலும் பல நிகழ்ச்சிகளை சிறப்பாகவும் நிறைவாகவும் நடத்தி முடிக்க உதவியது. பல்வேறு தரப்பட்ட வாடிக்கையாளர்களுடன் (Clients & Customers) ஆக்கப்பூர்வமாகப் பேசி சிறந்த ஒப்பந்தங்களைப் பெற உதவியது.

அவரின் பல் மொழிப் புலமையும் இசையறிவும் நண்பர்கள் மட்டுமல்லாமல் நண்பர்களின் குடும்பத்தினர்களும் வெகுவாகப் பாராட்டுவார்கள்.

சௌரியந் தவறேல்

திருச்சி நண்பர் ஒருவரிடம் பேசும்போது, ‘‘எனக்கும் ஜூல்பிகாருக்கும் விளையாட்டின் மூலமே பழக்கம், நான் அவரைவிட 5 வயது சிறியவன். நான் ஒரு முறை இங்கிலாந்து சென்றிருந்தேன். நான் வந்திருப்பதாக ஜூல்பிகாரிடம் சொன்னபோது, அவர் உடனே எவ்வித தயக்கமுமின்றி, தானே நிலையத்திற்கு வந்து என்னை அவர் வீட்டிற்கு அழைத்துச் சென்று நன்கு உபசரித்தார். என்னைச் சில முக்கிய இடங்களுக்கு அழைத்துச் சென்று காண்பித்தார்.

‘‘அவர் வெளிநாட்டில் இருந்தாலும், தமிழ் நாட்டின் விருந்தோம்பல் பண்பை விடவில்லை என்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. நான் இலண்டன் மாநகரை சுற்றிப்பார்க்க, என்னை அழைத்துச் சென்ற விதம் மூலம்... நான் இலண்டன் மாநகரையே அவரின் கண்கள் வழியாகப் பார்த்த காட்சிகள் இன்றளவும் என் மனதில் நிற்கின்றன’’.

‘‘ஜூல்பிகார் அமைதியானவர் மட்டுமல்ல, மிகவும் தைரியமானவர். நான் ரீடிங் நகரத்திலிருந்து (Reading, UK) புறப்படும்போது இரயில் நிலையத்தில் ஸ்கேனிங் இயந்திரம் நினைத்தபடி செயல்படவில்லை, அதனால் நான் பாதுகாப்பு அதிகாரிகளால் நிறுத்தப்பட்டு நுழைவு மறுக்கப்பட்டேன். நான் என்ன செய்வதன்று அறியாமல் பதற்றம் அடைந்தேன். ஜூல்பிகாரை மீண்டும் அழைப்பதற்கு எனக்குத் தயக்கம் இருந்தது. ஏனெனில் என்னை இரயில் நிலையத்தில் விட்டுவிட்டு, அவர் தற்போது தான் வீட்டிற்கு சென்றிருந்தார். பிறகு வேறு வழி தெரியாமல், தொலைபேசி மூலம் ஜூல்பிகாருக்குத் தெரியப்படுத்தினேன். மீண்டும் பயணம் மேற்கொண்டு ரயில் நிலையத்திற்கு வந்த அவர், முதலில் என்னை ஆசுவாசப்படுத்தினார். பின்பு அதிகாரிகளிடம் அவர் மேற்கொண்ட விவாதம் இன்னும் நினைவில் நீங்காமல் உள்ளது. எனக்கு இரயிலில் பயணிக்க அனுமதி வாங்கிக் கொடுத்ததோடு, இரயில் நிலைய அதிகாரிகள் என்னிடம் நடந்த நிகழ்வுக்கு மன்னிப்பு கோரியது மனதிற்கு நெகிழ்ச்சியான தருணத்தை ஏற்படுத்தியது’’ எனப் பசுமை நிகழ்வை நினைத்துப் பார்த்தார்.

ஜூல்பிகார் இடத்தில் நாம் இருந்திருந்தால், ‘எதற்கு வீண் வேலை?’ என்று எண்ணி ‘‘நீங்கள் வேறொரு பயணச்சீட்டு வாங்கிக்கொள்ளுங்கள்’’ என்று கூறியிருப்போம் அல்லது மீண்டும் ரயில் நிலையம் வந்து, ‘‘நாமே வேறொரு நாட்டிற்கு வாழ வந்துள்ளோம். எதற்கு இந்த நாட்டின் அதிகாரிகளிடம் விவாதிக்க வேண்டும்’’, எனப் பயந்து நாமே ஒரு பயணச்சீட்டு



ஜூல்பிகார்

வாங்கிக் கொடுத்திருப்போம். ஆனால் ஜுல்பிகாரோ, தன் ஊரிலிருந்து வந்த ஒருவர் செல்லுபடியாகும் பயணச்சீட்டு இருந்தும் பயணிக்க இயலவில்லை, அவர்மேல் தவறு இல்லையெனத் தெரிந்ததும், சிறப்பாக வாதாடி அவர் நண்பரின் உரிமையை நிலை நாட்டினார் என்பது மனதிற்கு மிகவும் நெருக்கமான செய்தி.

'ஔளரியந் தவறேல்' (புதிய ஆத்திசூடி: 36)

எடுத்துரைக்கும் 'வீரத்தை விட்டு விடாதே' இவருக்குப் பொருந்தியது.

'தந்திரிக்கு அழகு தறுகண் ஆண்மை'

(நறுந்தொகை அழகுப்பண்புகள்: 8)

என்ற சொற்படி, ஜுல்பிகாரின் அஞ்சாமையும் வீரமும் அவரது தலைமை மற்றும் துணிச்சலை பறைசாற்றியது...

ஜூல்பிகாரும் குழந்தைகளும்

சுற்றந் தழால்

நண்பர்கள் அடிக்கடி சொல்வது "ஜூல்பிகாரைப் பற்றி நினைக்கும்போது, முதலில் கண் முன் தோன்றுவது அவரின் புன்னகை மட்டுமே".

'பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற' (குறள்: 95)

அடக்கமான பண்பும், இனிமையாகப் பேசும் இயல்பும் தவிர, ஒருவருக்குச் சிறந்த அணிகலன் வேறு இருக்க முடியாது.

இந்தியாவில் உள்ள நண்பர்களின் குடும்பத்தையும் சரி, இங்கிலாந்தில் உள்ள நண்பர்களின் குடும்பத்தையும் சரி, அவர் தன் குடும்ப உறுப்பினர்கள் போலவே எண்ணியவர். அவர்களின் மீது அக்கறை கொண்டவர்.

நண்பரின் மனைவி அவரைப் பற்றி நெகிழும்போது, "ஒரு புதிய மணமகளாக நான் இங்கிலாந்து வந்த சமயம் அது, நண்பர்களை அழைத்து விருந்து கொடுக்க நாங்கள் முடிவு செய்திருந்தோம். நான் 'ஒரு புதிய வகை மூலிகைத் தேநீர்' தயாரிக்க முடிவு செய்தேன். எங்கள் குடும்பத்தில் அது சில விமர்சனங்களைக் கொடுத்தது. ஆனாலும், நான் என் முயற்சியைக் கைவிடவில்லை. விருந்தில் நான் புதிய வகை மூலிகைத் தேநீர் கொடுக்க எல்லோரும் அருந்தினர். நான் விமர்சனங்களை எதிர்நோக்கிக் காத்திருந்தேன். விருந்தும் முடிந்தது. அனைவரும் கிளம்பினார், ஆனால் யாரும் என் புதிய முயற்சியைக் கண்டு கொள்ளவில்லை. ஜூல்பிகார் வெளியேற வேண்டிய நேரம்... அவர் எழுந்து நின்று, தனது பையை எடுத்துக் கொண்டு, அனைவரிடமும் விடைபெற்றார். பின்னர், அவர் என்னைப் பார்த்து "மிகவும் அருமையான தேநீருக்கு நன்றி. இது ஒரு புதிய முயற்சி என்று நினைக்கிறன்" என்று அதன் தன்மைகளைப் பற்றி ஆலோசனைக் கேட்டார். அப்பொழுது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஏதோ சாதித்தது போல உணர்ந்தேன். ஒரு சின்ன அக்கறைதான். ஆனால், எத்தனை அளப்பறியது. அந்த ஒரு நிகழ்வே பின் நான் அறிந்த அவரின் அனைத்து குணங்களுக்கும் சான்றாக அமைந்தது. இந்த மனிதர் ஒரு மிகச் சிறந்த மானிடரென்று" கண்களில் உவகை ததும்ப பேசினார்.

மற்றோரு நண்பர் கூறும்போது, "இங்கிலாந்தில் (2001) எனது ஆரம்ப நாட்களில் நான் ஜூல்பிகாரைச் சந்தித்தேன். அவரைப் பற்றி உண்மையாகப் புரிந்துக் கொள்ள எனக்குக் கூடுதலாக சில காலம் தேவைப்பட்டது. வெளிப்புறத் தோற்றத்தில் அவர் ஒரு கண்டிப்பான நபர் போலத் தோன்றினாலும், பழகும் போது தான் தெரிந்தது; அவர் எவ்வளவு மென்மையான இயல்புடையவர் என்று. அவர் கனிவானவர், அக்கறையுள்ளவர், சிந்தனையுள்ளவர். மிகவும் புத்திசாலி மற்றும் அறிவுள்ளவராக இருந்தபோதிலும் மிகவும் அடக்க

குணமுள்ளவர்'' என ஜுல்பிகார் அவர்களை வார்த்தையில் வர்ணித்து மகிழ்ந்தார். ஜுல்பிகார் யாரைக் கண்டாலும் முதலில் அவர்களைத் தனது புன்னகை மூலம் வரவேற்பார். நண்பர்களின் அனைத்து மன அழுத்தங்களும் அவரின் முதல் புன்னகையிலேயே கரைந்துவிடும். அவரைக் கண்டவுடன் ஒரு தன்னம்பிக்கையும் அவரிடம் சில நிமிடங்கள் பேசினால், 'நாம் எதையும் இவரைப் போலவே சாதிக்கலாம்' என்ற மனப்பக்குவமும் ஏற்படும்.

அவரிடம் தானாகப் புலப்படுவது அவரிடமிருக்கும் விலை மதிப்பற்ற அறிவுச்செல்வமும் அற்புதமான நற்பண்புகளும், பலமான அவரின் தைரியம் எனும் ஆயுதமும். அவர் தனது கூர்மையான மற்றும் ஆழமான தொழில்நுட்பத் திறனுடனும், புத்திசாலித்தனத்துடனும் தனித்து நின்றார். அதுவே அவரின் மகத்துவம்!

ஒரு நபரின் உண்மையான அன்பு, அவர் நம்மீது மட்டும் அக்கறை கொள்வதிலல்ல; அதையும் கடந்து அவர்கள் நம்மைச் சார்ந்தவர்களையும் எவ்வாறு அக்கறையுடன் நடத்துகிறார்கள் என்பதுதான்... அதே நண்பர் பகிர்ந்த நினைவலைகள், ''ஒவ்வொரு முறை எங்களைக் காண ஜுல்பிகார் வரும் போதும், அவர் என் வயதான தாயுடன் (செவித்திறன் குறைபாடு இருந்தபோதிலும்) அக்கறையுடனும், மிகுந்த ஈடுபாடுடனும் நலம் விசாரித்து உரையாடல் மேற்கொள்வார். அந்த உரையாடல் எனது தாய்க்கு மேலும் நம்பிக்கையூட்டும். எனது தாய்க்கு தமிழ் தவிர வேறு மொழி தெரியாது. எனது தாய் படிப்பதற்காகத் தமிழ் பத்திரிகைகளைத் தேடி வாங்குவதோடு மட்டுமல்லாமல், அதை நேரடியாக அவரிடம் ஒப்படைப்பார். இது ஒரு சிறு நிகழ்வாக இருந்தாலும்; சில பவுண்டுகளே செலவு ஆனாலும், பெரியவர்களிடம் ஜுல்பிகார் மிகவும் கனிவாக இருந்தது, அவர்களுக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியைக் கொடுத்தது'' என மேலும் ஒரு படி அவரை உயர்த்தி ''எனது தாயாரை அவர் நடத்திய விதத்திலிருந்து, அவர் தனது பெற்றோரை எவ்வளவு நேசிக்கிறார் என்பது புலப்பட்டது'' எனவும் பெருமை கொண்டார். ''ஜுல்பிகார் என்றாலே அவருடைய இரக்கம் தான் என் நினைவில் வருகிறது. நம் வாழ்க்கையில் அவரது முத்திரைகள் அழியாதவை'' எனத் தன் வாழ்வின் வழிகாட்டியாக அடையாளம் காட்டினார்.

'ஞயம்பட உரை' (ஆத்திச்சூடி: 17)

அதாவது பிறர் மகிழும்படி, இனிதே பேசிப் பழகும் பண்புடையவர்.

ஜுல்பிகார் அவர்களின் உயர்வு,
அவர் கொண்ட ஒழுக்கத்தால் பெற்றதே!

குன்றேன நிமிர்ந்து நில்

2017 ஆம் வருடம், ஜூல்பிகார் தனக்கு நுரையீரல் சுவாசத் திறன் குறைந்து கொண்டிருப்பது பற்றி அறிந்ததும், அதைப் பற்றிப் பதட்டப்படாமல்; எதனால் இவ்வாறு ஆனது என்று பல மருத்துவரிடம் ஆலோசனை மேற்கொண்டார். 'பல்மனரி ஃபைப்ரோஸிஸ் (Pulmonary Fibrosis) என்ற ஒரு நுரையீரல் தீவிர திறன் குறைவுதான்' இது என்பதறிந்து, அதைப் பற்றியப் புரிதலை மேற்கொண்டார். எந்தவித சிறு சலனமும், பயமும் ஜூல்பிகாரிடம் தென்படவில்லை.

பல வகைப்பட்ட மருத்துவர்களிடம் ஆலோசனைகளைப் பெற்றார். ஆங்கில மருத்துவம் மட்டுமல்லாமல், பிற மாற்று மருத்துவமும் முயன்றார். 'பிராணாயாமம்' போன்ற யோகா பயிற்சிகளும் செய்தார். அவருக்கு ஒரு சில பயிற்சிகளை யோகா பயின்றவர் சொல்லிக் கொடுக்கும்போது, "ஜூல்பிகார் தன்னைவிட சிறப்பாகவும், முறைப்படி செய்வதாகவும்" பாராட்டினார்.

ஆனால், வருடங்கள் போகப் போக ஜூல்பிகாரின் நுரையீரல் சுவாசத் திறன் குறைந்து கொண்டே சென்றது. பின்பு ஒரு கட்டத்தில் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சையே முடிவாக்கப்பட்டது.

அவரின் நிலை குறித்துக் கூறி, யாரையும் பயமுறுத்தவோ அனுதாபங்கள் பெறவோ அவர் விரும்பவில்லை. எந்த ஒரு நிலையிலும் அவர் மனம் கலங்கவோ, தன்னம்பிக்கையை இழக்கவோ இல்லை.

'வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்' (குறள்: 665)

செயல்திறனால் பெருமை பெற்று உயர்ந்தவரின் வினைத் திட்பமானது, நாட்டை ஆளும் அரசனிடத்திலும் எட்டி மதிக்கப்பட்டு விளங்கும்.

'எண்ணத்தாலே சிறந்த மன உறுதி கொண்டவர்கள்' வாழ்வின் பக்கங்களில் வரவு வைக்கப்படுவார்கள்.

'குன்றேன நிமிர்ந்து நில்' (புதிய ஆத்திசூடி: 17)
'சாவதற்கு அஞ்சேல்' (புதிய ஆத்திசூடி: 26)
'சிதையா நெஞ்சுகொள்' (புதிய ஆத்திசூடி: 27)

எனும் பாரதியாரின் மன உறுதி இவரிடம் மிகுதியாகக் காணப்பட்டது.

'நெஞ்சு கெடாவகை உரமாய் நின்றால்...' (காவியப் பாவை)

என்ற வீறுகவியரசர் முடியரசனாரின் வரிகளை இதயத்தில் தாங்கி, எந்த ஒரு பயமுமின்றி, தனக்கு ஏற்பட்ட குறைபாட்டை எதிர்த்து நின்றார்.

❖ ❖ ❖

ஜுல்பிகார்

கேளீர் துன்பம் துடைத்தூன்றும் தூண்

தனது 'பல்மனரி ஃபைப்ரோஸிஸ் (Pulmonary Fibrosis) என்ற ஒரு நுரையீரல் தீவிரத் திறன் குறைவு' புரிதலை மருத்துவர்களிடம் கூறி அதைத் தெளிவுபடுத்திக் கொண்டதோடு மட்டுமல்லாமல், தன் நண்பர்களுக்கும் தனது புரிதலைப் பகிர்ந்தார். நண்பர்களை உணவு ஒவ்வாமை சோதனைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

ஜுல்பிகாருடன் MCA ஒன்றாகப் படித்த நண்பரும், அவருடன் ரீடிங் (Reading, UK) நகரில் அருகில் வசித்த நண்பர் ஒருவர் கூறும்போது, "தான் ஜுல்பிகாரின் முயற்சியினால் தான், உணவு ஒவ்வாமை சோதனைகளை மேற்கொண்டதாகவும்; அதனால் தான், தனக்கு சில உணவு ஒவ்வாமை உள்ளது என்பது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் கூறினார். பிறகு கடந்த மூன்று வருட காலமாக ஜுல்பிகாரின் அறிவுரைப்படி தனது உணவு முறைகளை மாற்றிக் கொண்டேன். என் குடும்ப உறுப்பினருக்கும் நுரையீரல் சுவாச திறன் குறைவு அறிகுறிகள் இருப்பதாக ஜுல்பிகாரிடம் கூறியபோது, அவருக்கு தெரிந்த மருத்துவர்களிடம் அவர்களைப் பரிந்துரைத்து, அனைத்து பரிசோதனைகளையும் மேற்கொள்ள அறிவுறுத்தினார். பரிசோதனை முடிவில், அது நுரையீரல் திறன் குறைவு அல்ல... வேறு சிறு குறைபாடு, அதை எளிதில் குணப்படுத்திவிடலாம் என மருத்துவர்கள் கூறியபோது ஜுல்பிகார் மிகுந்த மகிழ்சியடைந்து, இறைவனுக்கு நன்றி கூறினார்".

'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன்...'

உலகில் எல்லோரும் இன்புற்றிருக்கும் அந்தப் பெரும் நிலையினையே வேண்டுமென இறைவனிடம் சான்றோர்கள் யாசிக்கிறார்கள். உன்னத குணமுடையோருக்கே இந்த எண்ணங்கள் துளிர்க்கும். இது ஜுல்பிகார் அவர்களுக்கும் இருந்தது.

நண்பர்கள் வியந்து பாராட்டியது "தனக்கு மரணம் விளைவிக்கும் குறைபாடு இருப்பதைப் பற்றி பயம் கொள்ளாமல், தன் நண்பர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நலமாக வாழ வேண்டும் என்று நினைத்து, அவர்களுக்கு தான் கற்ற புரிதலைத் தெரிவித்து அவர்களைத் தொடர்ந்து அறிவுறுத்தியுள்ளார். கூறுவதோடு நிறுத்தாமல் அவர்களைத் தனக்கு தெரிந்த மருத்துவர்களிடம் பரிந்துரைத்து பரிசோதனைகளுக்கும் உதவியுள்ளார்.

மற்றவர்களின் பரிசோதனை முடிவுகள் சாதகமாக வந்தவுடன், தான் இறப்பை நோக்கிச் செல்வதைப் பற்றி கவலை கொள்ளாமல் அடுத்தவர்களின் நலனுக்காக மகிழ்ந்துள்ளார்".

"**நல்ல எண்ணம் கொண்ட 'ஜுல்பிகாரின் நண்பன்' எனச் சொல்லிக் கொள்வதில் பெருமிதம் அடைவதாக**" அனைத்து நண்பர்களும் கண்கள் கலங்கினர்.

'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம் உயிர்போல் எண்ணி
தன்னலம் கருதாமல் பொது நலம் கருதி வாழ்ந்தவர்'.

விதை உறக்க காலம்

ஜூல்பிகார், தனக்கு 2020 ஆம் வருடத்தில் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை நடக்கலாமென எண்ணினார். ஆனால், உலகின் தொற்று நோய் சூழல், அவருக்கு சாதகமாக இல்லை. நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை நடப்பதில் தாமதம் ஏற்பட்டது. 2021 ஆம் வருடம் மார்ச்/ஏப்ரல் வரை எதிர்பார்த்த அவர், பின்பு உலக நடப்புகளைப் புரிந்து கொண்டு, தன்னை அணுகிய நண்பர்களிடம் தன் நிலையை எளிதாகக் கூறினார். அதற்கு முன், தனது மிக நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் மட்டுமே கூறியிருந்தார்.

அவரின் நிலை கேட்ட சில நண்பர்கள், ஜூல்பிகார் எப்போதும் போல நகைச்சுவையாகப் பேசுகிறார் என எண்ணி, அவர் கூறியதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

"சில நண்பர்கள், தகவலின் அதிர்ச்சியினால் செய்வதறியாது பேசிக் கொண்டிருந்த தொலைபேசி இணைப்பைத் துண்டித்து விட்டதாகவும்; அதன் பின் சில நாட்கள் கழித்து, அதே நண்பர்கள் தங்களை நிலைப்படுத்திக் கொண்டு மீண்டும் தன்னை தொடர்பு கொண்டதாக" ஜூல்பிகார் நகைச்சுவையாகக் கூறினார்.

'கூற்றம் வரவுண்மை சிந்தித்து வாழ்வனீதே'

(இனியவை நாற்பது–பாடல்: 28)

முடிவின் வருகையை எதிர்பார்த்து வாழ்வது இனிது என்ற கூற்றுப்படி, தன்னிலையறிந்த ஜூல்பிகாரோ எப்பொழுதும் போல இயல்பாக இருந்தார். தன்னைச் சார்ந்தவர்களையும், நண்பர்களையும் ஆறுதல் படுத்தினார். யாரும் பயப்படத் தேவையில்லை, அனைவருக்கும் முடிவு இயற்கையே...! என்ன நான் கொஞ்சம் முன்னே செல்கிறேனென்று, மிக எளிதாகக் கடந்து சென்றார். தன்னிலை குறித்து யாரும் வருந்த வேண்டாமெனக் கேட்டுக்கொண்டார்.

ஜூல்பிகார் நல்ல பழக்க வழக்கம் உடையவர். எந்தத் தீய குணங்களும், தீய பழக்கங்களும், தீய செய்கைகளும் அவரிடம் காணப்படவில்லை... அவர் மிகுந்த இறை நம்பிக்கை கொண்டவர். இறை வணக்கம் மற்றும் பிரார்த்தனைகள் செய்பவர்.

'வைகறைத் துயிலெழு' (ஆத்திசூடி: 107), பழக்கத்தைக் கடைபிடித்தவர்.

காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணிவரை மட்டுமே அவர் பணி செய்யும் பழக்கம் கொண்டிருந்தார். எனவே அவருக்குப் பணி சார்ந்த மன அழுத்தங்கள் இல்லை. பிறகு, இரவு உணவு சீக்கிரம் உண்டு; நேரத்திற்கு

ஜுல்பிகார்

உறங்கும் பழக்கம் கொண்டிருந்தார். எந்தத் தேவையற்ற பொருட்களிலும், பழக்கத்திலும் அவர் அடிமையாகாமல் மனக்கட்டுப்பாட்டுடன் இருந்தார்.

எந்த ஒரு கடின சூழ்நிலையையும், எளிதாக எதிர் கொள்ளும் மன தைரியம் அவரிடம் இருந்தது. எந்தக் குறைகளையும் நாம் அவரை நோக்கிக் கூறுவதற்கில்லை. ஆனாலும், ஏன் அவருக்கு பல்மனரி ஃபைப்ரோஸிஸ் (Pulmonary Fibrosis) என்ற ஒரு நுரையீரல் தீவிர சுவாசத் திறன் குறைவு வந்தது என்கிற காரணம், இறைநிலைக்கு மட்டுமே தெரியும்.

அவர் நலம் பெற பல பிரார்த்தனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, நண்பர்கள் பல்வேறு வகைகளில் அவரவர் பழக்க வழக்க முறைகளில் பிரார்த்தனைகள் செய்தனர். ஆனால், இறைநிலையின் திட்டம் வேறாக இருந்தது.

'அவன் கொடுக்க நினைப்பதை யாரால் தடுக்க முடியும் ?'

'அவன் தடுக்க நினைப்பதை யாரால் கொடுக்க முடியும் ?'

என்ற வாசகம் மெய்யாகி நின்றது !

23.05.2021, அன்று அதிகாலை, ஜுல்பிகார் இந்த உலகத்தை விட்டு நீங்கி, ஒளியாகிப் போனார்...

இவ்வுலகில் இனி ஜுல்பிகார் சாதிப்பதற்கு எதுவும் இல்லை, ஜுல்பிகாரின் சேவைகள் தனக்கு வேண்டுமென இறைநிலை எண்ணியது போலும்.

செய்தி கேட்ட பல நண்பர்கள் முதலில் நம்பவில்லை. அவர் நம்முடன் இல்லையென அறிந்தும், பலர் இந்தச் செய்தி பொய்யாக இருக்க வேண்டும் எனப் பிரார்த்தித்தார்கள். அவர் நலம் பெற வேண்டும் என்று மீண்டும் அன்று முழுக்க பிரார்த்தனைகள் செய்தார்கள்.

அவர்கள் செய்வது, அவர்களுக்கே அறிவிலித்தனமாகத் தெரிந்தாலும்; ஜுல்பிகார் மீது அவர்கள் கொண்ட அதீத அன்பினால், செய்வதறியாது தவித்தனர். ஜுல்பிகார் இல்லா இவ்வுலகம் ஒரு வெற்றிடமாக... வெற்று இடமாக அவர்களுக்குத் தென்பட்டது.

'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்' (குறள்: 71)

அன்பை அடைத்து வைக்க தாழ்ப்பாள் ஏது? அது அன்பானவர்களின் கண்ணீரால் உடைபட்டுப் போகும் என வள்ளுவரே எழுதி வைத்தபிறகு, வேறென்ன செய்வது?

செய்தி கேட்ட பல நண்பர்களின் குடும்பத்தாரும் கண் கலங்கினர். அவரை இதுவரை ஒரு முறைக்கூட நேரில் காணாத, சில நண்பர்களின்

குடும்பத்தாரும் செய்தி கேட்ட அடுத்த நொடியே அவர்களை அறியாமல், கண்களிலிருந்து கண்ணீர் தேங்கின. மற்றவர்களின் நிலையே இவ்வாறெனில், அவரின் குடும்பத்தினரின் மன நிலையைப் பற்றிக் கூற வார்த்தைகளில்லை. அவர்கள் அடைந்த மன வேதனைகளையும், துன்பங்களையும் என்னவென்று கூறுவது.

இவ்வுலகை விட்டு மறைந்த ஜுல்பிகார், பலர் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரின் அறிவு பகிர்தல் மற்றும் உதவும் எண்ணங்களை உடனே கடைபிடிக்க முடியவில்லை என்றாலும் (அதற்குச் சில காலங்கள் எடுக்கும் என்பதால்) அவரின் மற்ற குணங்களாகிய தன்னம்பிக்கை, மனோதைரியம், விடாமுயற்சி, குறை கூறாமை, தைரியம், நேரம் தவறாமை, எளிமை, அடக்கம் மற்றும் வெளிப்படைத் தன்மை போன்றவைகளை அவர் வழியில் பின்பற்ற நண்பர்கள் உறுதி கொண்டார்கள்.

"அவர் விதைத்த விதையை விருட்சமாக்கி; அவரின் வழியே வாழ்வின் மனித நேயத்தை அடைய முயற்சிப்போம் என்ற உறுதியோடு" அவரின் பல நண்பர்கள் நோக்கம் கொண்டார்கள்.

45 வயதே ஆன ஜுல்பிகார், இந்தக் குறுகிய காலத்தில் சாதித்தது எண்ணற்றவை. அவரை ஒரு குறுகிய வட்டத்தில் அடக்கிவிட முடியாது.

அவரின் எண்ணங்களும் செயல்களும்:

- மிகப்பெரியவைகள்
- மதிக்கத்தக்கவைகள்
- மகத்தானவைகள்
- மேன்மை பொருந்தியவைகள்
- போற்றத்தக்கவைகள்
- உன்னதமிக்கவைகள்

'காலம் வலியது' என்ற மரபு பொய்யாகி இருத்தல் கூடாதோ என்ற ஏக்கத்தில் அவரின் குடும்பத்தினர்களும், நண்பர்களும்!

போர்வாள் - அன்பும் அறனும்

சிலருடைய குணாதிசயங்கள், அவரின் பெயருக்கே ஒத்துப் போகும். ஜூல்பிகார் எனும் பெயருக்கு 'வாள்' (Sword) என்று பொருள். இரட்டை முனைகள் கொண்ட வாள் (double-edged Sword) என்றும் அறியப்படுகிறது.

'அரியஎன்று ஆகாத இல்லைஎனச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின்' (குறள்: 537)

என்ற நெறிக்கு ஏற்ப, இவர் முடியாத செயல் என எதையும் ஒதுக்காது; தனது அறிவால் அனைத்தையும் செய்து முடித்தார்.

பெயரின் பொருளுக்கு ஏற்ப (இரட்டை முனைகள் கொண்ட வாள்)

ஜூல்பிகார் ஒரு தலைசிறந்த
கூர்மையான, அறிவு செறிந்த ஒரு முனையும்;
அனைத்து நற்பண்புகளும் ஒருங்கே குவிந்த மறு முனையும்
கொண்ட வாள்! போர்வாள்!

பெற்றோரையும், தன் குடும்பத்தையும் காத்த தலைமகன். பல நண்பர்களுக்கும், தன்னை சார்ந்தவர்களுக்கும், பல உதவிகள் செய்து... மன அழுத்தம், கடன், சோகம், தாழ்வு மனப்பான்மை என்ற எதிரிகளிடமிருந்து பாதுகாத்தவர்.

பலருக்கு தன் கூர்மையான அறிவைப் பகிர்ந்தளித்து, சரியான நேரத்தில் பல பயனுள்ள தகவல்களைக் கொடுத்து 'வேலையின்மை' என்ற எதிரியிடமிருந்து மீட்டவர்.

பட்டை தீட்டப்பட்ட தன் சாணக்கிய புத்தியாலும், மெருகூட்டப்பட்ட தன் புரிதலினாலும், பலரை இன்னல்கள் என்ற எதிரிகளிடமிருந்து கரை சேர்த்தவர்.

தனது உயர்வான பண்புகளாலும், சீரிய அணுகுமுறையாலும், பண்பட்ட குணங்களினாலும் பலருக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து, பல இதயங்களில் குடிகொண்ட உன்னத கனிவுமிக்க மாவீரன்.

பெற்றோர், குடும்பத்தார்கள் மற்றும் உற்றார் உறவினர்களுக்கு தன்னால் முடிந்த அனைத்து விதமான பெருமைகளைத் தேடிக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், அனைத்து நண்பர்களும் '**ஜூல்பிகாருக்கு நான் நண்பன்**' எனப் பெருமை கொள்ள வைத்தவர்.

ஜூல்பிகாரின் தந்தை இராணுவத்தில் பணிபுரிந்ததின் மூலம், நாட்டைப் பாதுகாத்த மாவீரர் ஆனார்;

பல்வேறு இன்னல்களிலிருந்து நண்பர்களை மீட்டு, அவர்களை நல்வழிப்படுத்தி;

குடும்பத்தினரைப் பெருமைகொள்ள செய்த ஜூல்பிகாரும் ஒரு மாவீரனே!

நவீன இலக்கியத்தின் தொடக்கம்

'வரலாறு என்பது இந்த உலகிற்கு வந்து போனவர்களுக்கான கணக்கு அல்ல! மாறாக, இந்த உலகிற்கு ஏதாவது ஒன்றைத் தந்து போனவர்களுக்கான கணக்கு!'

அப்படியொரு ஈகை குணத்தால், வரலாறாய் மாறிப் போனவர் ஜூல்பிகார் அவர்கள்.

'வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்' (குறள்: 38)

தொடர்ந்து நற்செயல்களில் ஈடுபடுபவருக்கு வாழ்க்கைப் பாதையைச் சீராக்கி அமைத்துத் தரும் கல்லாக அந்த நற்செயல்களே விளங்கும்.

ஜூல்பிகார் மற்றொரு புதிய இலக்கியத்தின் தொடக்கம். பல தமிழ் இலக்கியங்களில் கோடிட்டு காண்பிக்கப்பட்டுள்ள

- நற்பண்புகள்
- மனிதன் கடைபிடிக்க வேண்டிய நல்லொழுக்கங்கள்
- போற்றத்தகு ஈகை குணங்கள்
- அறிவார்ந்த திறன்கள்
- வீர தீர மன தைரியங்கள்

இவைகளில் பலவற்றை ஜூல்பிகார் அவர்கள் எளிதாகவும், இயல்பாகவும் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒரு உதாரண மனிதராகத் திகழ்ந்தார்.

'மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியால் வாழ்தலினிது' (இனியவை நாற்பது: 20)

என்ற சொற்பதம் மொழிய வாழ்கின்ற மக்களுக்கெல்லாம் பயன்பட வாழ்ந்தவர்.

வாழும் காலத்தில் அவரை அன்பு நண்பராகவும், உன்னத மனிதராகவும் பார்த்த நாங்கள்; அவர் இவ்வுலகை விட்டுச் சென்ற பின், அவரைப் பற்றிய நினைவலைகளின் தாக்கங்கள் உயர உயர, ஜூல்பிகாரை ஒரு நவீன தமிழ் இலக்கியமாகவே எங்களின் எண்ணங்கள் உருவகம் கொள்கிறது!

ஜுல்பிகார்

“மேலான அறிவையும்
உயரிய நற்பண்புகளையும்
ஒரு சேரக் கொண்ட இவர்
நாங்கள் வாழும் காலத்தில் கண்ட
மிக உன்னத மனிதர், புனிதர்!”

“ஜுல்பிகாரின் அருமை பெருமைகளை
அனைவரிடமும் உரக்கச் சொல்லி
பெருமிதம் கொள்கிறோம்!”

“மானுட தர்மம் வழி வாழ்ந்த
வாளெனும் ஜுல்பிகாரின்
கருத்துக்களும், புகழும்,
பெருமைகளும்
பல்லாண்டு வாழும்”.

ஞயம்பட உரை
வையத் தலைமைகொள்
நப் போல் வளை
ஞிமிரென இன்புறு
கழறும் அவை அஞ்சான்
ஈதல் இசைபட வாழ்தல்
மொய்ம்புறத் தவஞ் செய்
சௌரியந் தவறேல்
புதியன படைத்தல்
குன்றேன நிமிர்ந்து நில்
நேர்படப் பேசு
ஊக்கமது கைவிடேல்
இயல்வது கரவேல்
நுனி அளவு செல்
அறனை மறவேல்
ஒளவியம் பேசேல்
ஒப்புரவு ஒழுகு
நூல் பல கல்